08

...செ. 20.

# பகுத்தறிவு

(அல்லது) கத்தோலிக்க குருவின்

# மரண சாஸனம்.



...சியர், ஜீன் மெஸ்லியர், பாதிரியார்.

வெளியிடுவோர்,
...ற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
ஈரோடு.

1935.

[அணா 4.

Q62
N35
17804
108

A ACL

# பகுத்தறிவு

(அல்லது) கத்தோலிக்க குருவின்

# மரண சாஸனம்.

———)o(———

ACL-TML 01310

OF THE REG... 6-APR 1955 ...ADRAS

ஆசிரியர்

ஜீன் மெஸ்லியர், பாதிரியார்.

ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்

மிஸ் ஆனுநாப்.

தமிழில் மொழி பெயர்த்தவர்

தோழர், S. குருசாமி, B. A.,

வெளியிடுவோர்,

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,

ஈரோடு.

லை] 1935. [அணா 4.

ACL-TNAL
01310

# அட்டவணை.


| அத்தியாயம். | | பக்கம். |
|---|---|---|
| | பீடிகை | 1 |
| | இப்புத்தகத்தைப்பற்றி சில அறிஞர்கள் அபிப்பிராயம் | 2 |
| | வால்டையரது அபிப்பிராயம் | 6 |
| | ஜீன்மெல்லியர் ஜீவிய சரித்திரம் | 8 |
| 1. | ஒரு (உதாரண) நீதிக்கதை | 12 |
| 2, 3. | மதம் என்பது என்ன? | 16 |
| 4. | மதம் கடவுள் இல்லாமலே மனிதன் பிறக்கிறான் | 18 |
| 5. | கடவுள் நம்பிக்கை அவசியமா | 19 |
| 6. | மதம் குருட்டு நம்பிக்கையின் மீதே கட்டப்பட்டிருக்கிறது | 20 |
| 7. | எல்லா மதங்களும் அபத்தமே | 20 |
| 8. | கடவுளைப்பற்றிய எண்ணத்திற்கே அர்த்தமில்லை | 21 |
| 9. | மூட நம்பிக்கையின் மூலகாரணம் | 22 |
| 10. | மதம் எப்படி ஏற்பட்டது | 22 |
| 11. | மதத்தின் பேரால் வஞ்சகர்கள் பிழைப்பது | 23 |
| 12, 13. | அற்புதத்தின் துணையால் மதம் அறிவீனத்தை வளர்க்கிறது | 24 |
| 14. | மதமும் காட்டுமிராண்டித் தனமும் | 25 |
| 15. | ஆதிக்கஞ் செலுத்தவே மதங்களுண்டாயின | 25 |
| 16. | மதத்தின் அஸ்திவாரமே ஆடுகிறது | 26 |
| 17, 18. | கடவுள் இருப்பதை ருசுப்படுத்த முடியுமா? | 27 |
| 19. | கடவுள் நிரூபிக்கப்படவேயில்லை | 28 |
| 20. | கடவுள் என்பது ஆத்மாவா? | 29 |
| 21. | ஆத்மா என்பது ஒரு மனோராஜியம் | 30 |
| 22. | திடபதார்த்தமே எதற்கும் மூலகாரணம் | 31 |
| 23. | தற்கால மதங்கள் சொல்லும் கடவுள் என்பது என்ன | 32 |
| 24. | சூரியவணக்கத்திலாவது சிறிது அர்த்தம் உண்டு | 33 |
| 25. | நீங்கள் சொல்லும் ஆன்மாவான கடவுளோ? | 34 |
| 26. | கடவுள் என்றால் என்ன? | 35 |
| 27. | மதத்திலிருக்கும் முரண்பாடுகள் | 36 |
| 28. | கடவுளென்பது கட்டுக்கதை | 36 |
| 29. | ஆகவே நாஸ்திகம்தான் சரி | 37 |
| 30. | நாஸ்திகம் குற்றமல்ல | 39 |
| 31. | கடவுள் நம்பிக்கை தொட்டிற் பழக்கமே | 41 |

அத்தியாயம். பக்கம்.

32. கடவுள் என்பது ஒரு பரம்பரை வழக்கம் 42
33. அதன் ஆரம்பகாலம் 42
34. அது பரவும் விதம் 43
35. பகுத்தறிய முடியாத காலத்தில் கற்பிக்கப்பட்டவை 44
36. இயற்கை விநோதங்களுக்கும், கடவுளுக்கும் சம்பந்தமில்லை 44
37, 38. இயற்கை விநோதங்களுக்குக் காரணம் உண்டு 45
39, 40. உலகம் ஒருவராலும் படைக்கப்படவில்லை 48
41. இன்னும் சில ருசுக்கள் 49
42. மனிதன் இருப்பதைக்கொண்டு கடவுளை ருசுப்படுத்த முடியாது 52
43. மனிதனும், உலகமும் 55
44, 45. உலக அமைப்பைக் கொண்டு கடவுளை நிரூபிக்கமுடியாது? 57
46. கடவுளுக்கும் அறிவுக்கும் சம்பந்தமுண்டா? 61
47, 48. மதத்திற்கும், கடவுளுக்கும் சம்பந்தமில்லை 63
49. சிருஷ்டியின் முடிவுதான் மனிதன் என்பது பெரிய அபத்தம் 64
50. மனிதனுக்காக கடவுள் இல்லை; கடவுளுக்காக மனிதனும் இல்லை 66
51. மனிதனை சந்தோஷப்படுத்துவதுதான் கடவுளின் நோக்கம் 67
52. கடவுள் என்ற வார்த்தைக்கு அர்த்தமே இல்லை 68
53. கடவுள் மனிதனுடைய நண்பன் அல்ல; கொடுமையான விரோதி 71
54. இல்லை; ஒரு அறிவுள்ள ஜீவனால் உலகம் ஆளப்படவே இல்லை 73
55. கடவுள் மாற்ற முடியாதவரா? 75
56. ஒன்றையும் மாற்றமுடியாத கடவுள் ஒன்று உண்டா? 76
57. சுவர்க்கமும், மறு ஜென்மமும் கற்பனைகளே 77
58. மற்றொரு சோம்பேறிக்கற்பனை 81
59. மனிதனுடைய துன்பங்களுக்குக் கடவுளே பொறுப்பாளி 82

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 APR 1948
MADRAS

# முகவுரை.

மத பக்தியும், கடவுள் பக்தியும் மனித ஜீவனின் பிறப்பிலேயே உண்டாகும் உணர்ச்சிகளல்ல. குழந்தைகளை அவைகளின் பெற்றோர்களும், சமூகத்தார்களும் எந்த முறையில் வளர்க்கின்றார்களோ அந்த முறையில் தான் அவைகளுக்கு மேற் சொன்ன உணர்ச்சிகளும் ஏற்படும். உதாரணமாக ஒரு குழந்தையினிடம் ஒரு விக்கிரகத்தைக் காட்டி, ''இது தான் சாமி; கும்பிடு,'' என்றால், அதுமுதல் அக்குழந்தை எல்லா விக்ரகங்களையும் ''இயற்கை''யாகவே கும்பிட்டுக் கொண்டுதானிருக்கும். இதேமாதிரி, ஒரு குழந்தையினிடம் ஒரு விக்கிரகத்தைக் காட்டி, ''இது ஒரு பொம்மை'' என்று சொன்னால், அக்குழந்தை அதையொரு பொம்மையாகவே தான் கருதும். மனிதன் மத பக்தனாவதும், கடவுள் பக்தனாவதும் அவனுடைய சந்தர்ப்பங்கள், கல்வி, அறிவு, அனுபவம், மனோதைரியம் முதலியவைகளைப் பொறுத்ததாகுமேயொழிய, அது ஒரு விதமான ''இயற்கை உணர்ச்சி'' என்றோ, ''ஜீவனின் இயற்கை குணம்,'' என்றோ சொல்லமுடியாது. இதை நிரூபிக்க ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பல்லாயிரக்கணக்கான உதாரணங்கள் காணலாம்.

ஜீன் மேஸ்லியரின் மரண சாஸனமாகிய இப்புத்தகத்தை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்ததின் காரணம், எந்த ஒரு மதத்தையும் குறை கூறவேண்

டுமென்ற எண்ணத்தினலல்ல. ஏனெனில், ஜீன் மெஸ்லியரால் சொல்லப்பட்டிருக்கும் அபிப்பிராயங்கள் எல்லாம் கிறிஸ்து மதத்திற்கு மாத்திரமல்ல, எல்லா மதங்களுக்குமே பொருத்தமானவைகளாகும். ஜீன் மெஸ்லியர் நாஸ்திகராகவே பிறக்கவில்லை. ஆஸ்திகத்திலேயே வளர்ந்து, ஆஸ்திகத்தையே பிறருக்கு ஊட்டி ஆஸ்திகத்தின் ஆணி வேராகக்கூட இருந்து, பிறகு தன்னுடைய தவறுதல்களை உணர்ந்து, மத அபிமானத்தை விட்டு, மனித அபிமான உணர்ச்சி வீரிட்டெழுந்து, "சாகும் தருவாயில் தான் ஒருவன் கலப்பற்ற உண்மை பேசுவான்," என்ற நீதிப்படி தனது மனதில் தோன்றிய உண்மைகளைக் கொட்டிய பெரியார் ஜீன் மெஸ்லியர் ஒருவர்தான் என்பது மிகைபடக் கூறுவதாகாது. தனது தவறுதல்களை யுணர்ந்து அவைகளை ஒப்புக்கொள்ளுகிறவனே சிறந்த மனிதன். தான் செய்த தவறுதல்களுக்கு தத்துவார்த்தம் கூறி திருப்திப்படுகிறவன் பிறரை ஏமாற்றுபவன் என்பதோடு, தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்பவனுமாவான்.

இப்போது வெளியாகியிருக்கும் மொழி பெயர்ப்பானது முதல் நூலின் ஒரு பாகமேயாகும். இந்த மொழி பெயர்ப்பில் முதல் நூலின் கருத்துக்களிலிருந்து கொஞ்சங்கூட வேறுபடாமலிருக்கவும், ஆங்கிலத்தில் எவ்வளவு தெளிவான நடையிலிருக்கின்றதோ, அவ்வளவு தெளிவான, எளிய நடையிலேயே தமிழிலும் இருக்கவும் என்னாலியன்ற அளவு முயன்றிருக்கிறேன். எவ்விதமான விருப்பும் வெறுப்புமற்று இதைப்படித்து உணருகிறவர்கள், "மதம்," "கடவுள்" சம்மந்தமான எப்படிப்பட்ட

ஒழுங்கான தர்க்கங்களுக்கும் சரியான பதில் அளிக்க முடியும் என்பது எனது நம்பிக்கை. தமிழறிந்த சகல மதக்காரர்களும் இதைப்படித்து இதில் கூறப்பட்ட தர்க்கங்களுக்கு பொருத்தமான பதில் கூறுவார்களேயானால் அதுவே இம்மொழி பெயர்ப்பால் ஏற்பட்ட நல்ல பலனாகும்.

சென்னை,
1.1.35.

S. குருசாமி.

———)o(———

உண்மை விளக்கம் பிரஸ்,
ஈரோடு.

# பகுத்தறிவு

## (அல்லது) கத்தோலிக்க குருவின்

# மரண சாஸனம்.

———)o(———

## பீடிகை.

Jean Meslier (ஜீன் மெஸ்லியர்) என்பவர் "எட்ரி பிக்னி" என்னுமிடத்தில் 30 வருஷ காலம் ரோமன் கத்தோலிக்க குருவாக இருந்தார். பிறகு 'ஷாம்பேன்' 'பிரான்ஸ்' முதலிய இடங்களுக்குச் சென்றபின் மதக் கட்டளைகளையே அடியோடு விட்டார். கடைசியில் அவருடைய சிஷ்ய கோடிகளுக்கும், பொதுவாக உலகத்தாருக்கும் "பகுத்தறிவு" என்று பெயரிட்ட தனது மரண சாஸனத்தை மூலதனமாக விட்டுப்போனார். பிரஞ்சு பாஷையில் எழுதப்பட்ட அச் சாஸனமானது அவருடைய மரணத்திற்குப் பின் வெளியிடப்பட்டு, பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது. அதை இங்கிலீஷில் மொழி பெயர்த்தவர் மிஸ் ஆனு நாப் என்னும் பெண்மணியாவார்.

அதைத் தமிழில் மொழி பெயர்த்து உலக மக்களின்—(முக்கியமாக—கிறிஸ்துவர்களின்) பகுத்தறிவுக்கு விடுகிறேன். S. G.

## இப்புத்தகத்தைப்பற்றி சில அறிஞர்கள் அபிப்பிராயம்.

---

நியூபரி போர்ட் 23-ந் தேதி செப்டம்பர் 1878-ல் ஜேம்ஸ் பார்டன் என்பவர் இப்புத்தகத்தைப் பற்றி, எழுதியிருப்பதாவது:—

இங்கிலீஷ் பாஷையிலும், ஜர்மன் பாஷையிலும் ஜீன் மெஸ்லியரின் மரண சாஸனத்தை மொழி பெயர்த்துதவிய மிஸ் ஆனு நூப் மிக்க உபயோகமான ஒரு வேலையைச் செய்து முடித்திருக்கிறூர் என்பது மிகையாகாது.

"யோக்கியமான குருவாகிய ஜீன் மெஸ்லியரால் எழுதப்பட்ட இப்புத்தகமானது சென்ற நூற்றுண்டில் நடந்த நிகழ்ச்சிகளுள் மிகவும் அதிசயமானதும், அதிக அபாரமானதுமான நிகழ்ச்சியாகும்............'பெயின்', 'வால்டையர்' முதலியவர்கள் சில விஷயங்களை மறைத்து வைத்தார்கள். ஆனுல் ஜீன் மெஸ்லியர் அவ்விதம் செய்யவில்லை. அவர் ஒன்றையும் ரகசியமாய் வைத்துக்கொள்ளவில்லை. ஆயினும் ஒரே ஒரு குரு மாத்திரம் தனது மரண காலத்தில் சாஸனம் எழுதி வைத்தது அவ்வளவு ஆச்சரியமாக இல்லை. ஆனுல் பின் எது ஆச்சரியமென்ருல், எல்லா குருமார்களும் இவ்விதம் செய்வதில்லை என்பதே."

ஒரு கத்தோலிக்க குருவானவர், அவருடைய அந்திய காலத்தில், அதுவரை தான் செய்த நம்பிக்கை காரணமான பிழைகளையெல்லாம் நினைத்துருகி, 'கத்தோலிக்'

மதத்தை மக்களுக்குச் சொல்லிக் கொடுத்த பாவத்திற்காகக் கடவுளிடம் மன்னிப்புக் கேட்டு தனது அநுபவத்தைத் திரட்டி எழுதப்பட்ட, மரண சாஸனத்தை 'வால்டேயரும்' புகழ்ந்து பாராட்டியதில் ஆச்சரியமில்லை.

"அப்பே பாரல்" என்னும் கிறிஸ்து மத குருவானவர் 'வால்டையர்' போன்ற ஆசிரியர்களின் நூல்களால், கடவுள் மேடைக்கு மாத்திரமல்ல, அரசனுடைய சிம்மாசனத்திற்கே ஆபத்து வரப் போகிறது என்பதை முன்னெச்சரிக்கை செய்தார். இன்னும் ஜீன் மெஸ்லியரின் மரண சாசனத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது 'அவருடைய மதத் தூஷணைகளும, கடவுள் மறுப்புக் கொள்கைகளும் பாமர மக்களின் மனதைக் கவர்ந்து விட்டனவே," என்று ஆத்திரத்தோடு கூறுகிறார்.

இன்னும் அவர் முன் யோசனையோடு கூறியிருக்கும் விஷயங்கள் மிகவும் ருசியானவை. அவர் கூறுவதாவது:— "ஜாகோபியர்கள் பின்னொரு காலத்தில் எல்லா மனிதர்களும் சுபேச்சை என்றும், சமம் என்றும் சொல்லுவார்கள். இந்த சமத்துவம், சுதந்திரம் இரண்டின் பலனை மனிதன் பகுத்தறிவையே பின்பற்ற வேண்டுமென்றும் முடிவு கட்டிவிடுவார்கள். மனிதனுடைய பகுத்தறிவை அற்புதங்களுக்கும், கடவுள் பேராலுள்ள விஷயங்களுக்கும் கட்டுப்படுத்தக்கூடிய எந்த மதத்தையும் அடிமைத்தனம் என்று சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். ஆகவே சுதந்திரம், சமத்துவம் ஆகிய பகுத்தறிவு ஆட்சி நடைபெறவேண்டுமானல் மனிதனை இத்தகைய மதங்களிலிருந்து விடுவிக்கவேண்டும் என்று சொல்லுவர்கள்," என்பதேயாகும்.

இவர் முன்னெச்சரிக்கையாகச் சொன்னதெல்லாம் அப்படியே நடந்தேறியது. ஜாகோபியர்கள் (Jacobins) பட்ட பிரயாசை எல்லாம் பலன் கொடுக்காமல் போகவில்லை. அவர்கள் தூண்டிவிட்ட புரட்சியானது பிரான்ஸ் தேசத்தை மக்களுடைய சொந்த ஆட்சிக்குக்கொண்டு வந்துவிட்டது.

எப்படியெனில் சில வருஷங்களுக்குள், அதாவது மே 1889-ல், "பிரசிடெண்ட் கார்னுட்" என்பவர் பேசும்போது கூறியிருப்பதைக் கவனித்தாலே தெரியும்:— "நாம் இந்த உன்னத நிலைமையிலிருப்பதற்குக் காரணம் நமது முன்னோர்களாவார்கள். நமது முன்னோர்கள் நமது பிரான்ஸ் தேசத்துக்கும், பொதுவாக உலகத்துக்குமே செய்திருக்கும் பேருபகாரத்திற்குச் சமம், உலகில் எதுவுமேயில்லை என்று சொல்லலாம். நமது புரட்சியானது மனிதனுடைய உரிமைகளை அடிப்படையாய்க் கொண்டதாகும். இப்புரட்சியானது சரித்திரத்தில் மாத்திரமல்ல; தற்கால மனித சமூகத்திற்கே ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கியிருக்கிறதென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது."

இது முற்றும் உண்மையாகவே இருக்கிறது. பிரான்சிலிருந்த அறிவு இயக்கத்தார்கள் தான் "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" ஆகிய மூன்று தத்துவங்களையும் மனித சமூகத்திற்கு ஊட்டியிருக்கிறார்கள் மனிதனுடைய பகுத்தறிவின் உயர்வையும், மனித உரிமைகளின் சிரேஷ்டத்தையும் கற்பித்தவர்கள் அவர்களே. கடவுள் மேடையின் (மூலஸ்தானம்) கட்டுப்பாட்டையும், சிம்மாசனத்தின் விலங்குகளையும் உடைத்தெறிந்தவர்களும் அவர்களே........

பீட்டர் எக்ளர் என்பவர் ஷை புத்தகத்திற்கு 1889-ம் ஹு மே-மீ 21-ந் உயில் எழுதிய முகவுரை யாவது:-

ரோம் நகரிலுள்ள மதக் கூட்டத்தினரெல்லாம் இயற்கைக்கு எதிரியாக அற்புதங்களைச் செய்யக்கூடிய வல்லமை தங்களிடம் இருக்கிறதாகச் சொல்லுகிறார்களே யொழிய, அந்த அற்புதங்களின் உதவியினாலோ, அல்லது இல்லாமலோ, இதுவரையில் ஜீன் மெஸ்லியருடைய ஒரு சிறிய கேள்விக்குக்கூட அவர்களால் பதில் சொல்லமுடியாது போயிற்று. சுவர்க்கத்தின் சாவி தங்கள் கையிலிருப்பதாகச் சொல்லிக் கொண்டாலும், சுவர்க்கத்தில் கட்டுப்படக்கூடிய ஆன்மாக்களைத் தாங்களே இவ்வுலகில் கட்டுப்படுத்தும் சக்தியுள்ளவர்களாக பெருமை பாராட்டிக் கொண்டாலும், வருஷா வருஷம் அவர்களுடைய அதிகாரம் குறைந்து கொண்டு வருவதானது அவர்களுடைய வீண் பெருமையின் அறிவீனத்தை விளக்குகிறது. 'போப்'பினுடைய சர்வாதிகாரத்தைப் பற்றி அவர்கள் பிதற்றிக்கொண்டிருந்தாலும் முன்னொரு காலத்தில் ரோமபுரி செலுத்தி வந்த ராஜீய அதிகாரமெல்லாம் அடியோடு ஒழிந்து போய்விட்டது என்பதும், ஒவ்வொரு 'போப்'பும் இறந்து போகிறார்கள் என்பதும், 'போப்' சாமான்ய மனுஷன் என்பதையும், அவனும் இறக்கக் கூடியவன் என்பதையும் நிரூபிக்கிறது. அதுமாத்திரமா? செயின்ட் பீட்டரினுடைய (St. Peter) சந்ததியார்கள் சாதாரண மனிதர்கள்தான்:— ரோம் நகரிலுள்ள புனிதமான காலேஜூம் ஒரு காலத்தில் அழியக்கூடியது தான். நம்பிக்கையும், மதக் கட்டளை

யும் சேர்ந்து வெளிச்சத்தையும், அறிவையும் என்றும் எதிர்க்கவே முடியாது. கத்தோலிக்க மதமானது ஐரோப்பா முழுதும் நிச்சயமாய்க் குறுகிக்கொண்டே போகிறது ஆனால் அமெரிக்காவில் மாத்திரம் அம் மதம் தலைகாட்டுகிறதென்றால் அது அவர்களுடைய தவ றாகும். ''சுயேச்சை வேண்டுமென்றால் எப்போதும் விழிப்பாகவே இருக்கவேண்டும்'' என்ற அறிய உண்மை யை அமெரிக்கர்கள் மறந்துபோனதால் தான் இந்த நிலை ஏற்பட்டது.

———)o(———

## வால்டையரது அபிப்பிராயம்.

ஜீன் மெஸ்லியருடைய மரண சாஸனமாகிய இந் நூலைப்பற்றி பிரஞ்சு தேசத்து அறிஞரும், பிரஞ்சு ராஜீயப் புரட்சிக்கு விதை போட்டவர்களில் ஒருவருமாகிய வால்டையர் என்பவர் சொல்லியிருப்பதென்ன வென்றால்:-

''இப்புத்தகத்தைப் படித்ததும் திடுக்கிட்டுப் போனேன். ஏனெனில், ஒரு மத குருவானவர் உயிர் விடுந் தருவாயில், தான் கிறிஸ்து மதத்தைப் பிரசாரம் செய்த பாவத்திற்காக மனம் நொந்து எழுதியிருப்பதென்றால் அது சாமான்ய விஷயமல்ல. ஏனெனில் எப்பேர்பட்ட பொய்யனும் உயிர் போகும் வேளையில் உண்மையைக் கூறியே தீருவான் என்பது உலகமறிந்த உண்மையாகும். (சாகின்றவர்களுடைய உதடுகளில் உண்மையே தாண்டவ

மாடும் என்று மாத்யூ அர்னலட் கூறுகிறார்.) ஜீன் மெஸ்லியரின் புஸ்தகமானது மத வெறியர்களுக்கும், மதப்பித்தர்களுக்கும் ஒரு சிறந்த மருந்தாகும். இப்புத்தகம் மாத்திரம் உலகம் முழுதும் பறவுமேயானால் கிறிஸ்து மதத்தின் கதி என்னவாகும் என்பதும், பொதுவாகவே எல்லா மதங்களின் கதியும் என்னவாகும் என்பதும் எனக்கு நன்றாய் விளங்குகிறது. இப்புத்தகத்தைப் படித்தவர்கள் எல்லோரும் இதன் உண்மைகளில் முற்றிலும் திருப்தியடைந்து விட்டார்கள் என்பதை என் கண் முன்னே கண்டேன். இம்மனிதன் சாமன்யனல்ல தர்க்கங்களைக் கிளப்பி விட்டு ருசுப்படுத்திக் காட்டுகிறார். ஜீன் மெஸ்லியருடைய மரண சாஸனமானது உலகிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் அளிக்கப்பட்டதாகும். ஆகவே, உண்மையை நாடும் ஒவ்வொரு ஆண் பெண்ணினிடமும் இப்புத்தகம் இருக்கவேணடுவது அவசியம்! அவசியம்!! அவசியம்!!! என்று சொல்வேன். தன்னையே தானே ஏமாற்றிக்கொண்ட ஒரு மதக் குருவானவர், இறுதி காலத்தில் அதற்கு வருந்தி, துக்கப்படும் ஒரு நூலானது இதே மாதிரி, தங்களையே தாங்களே ஏமாற்றிக்கொண்டு வாழும் அநேகருக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. முக்கியமாக உலக வாழ்க்கையை ஆரம்பம் செய்பவர்களாகிய இளைஞர்களுக்கு இப்புத்தகம் ஒரு தீபஸ்தம்பம் என்றே சொல்வேன். உலகத்தில் மெஸ்லியர்கள் லட்சத்திற்கு ஒன்றுகூட கிடைப்பது அரிது; ஆனால் ஏமாற்றுக்காரர்களோ எண்ணத் தொலையாது. அபத்தமானதும், பயங்கரமானதுமான பல விஷயங்களை மனித சமூகத்திற்கு ஊட்டிய கொடுமையை நினைந்து நினைந்து மன

மூடைந்து வீறிட்டெழும்பிய உண்மைக் களஞ்சியமாகிய 'பகுத்தறிவு' என்னும் இந்நூலைப் பற்றி இன்னும் என்ன செல்வதென்பதே எனக்கு விளங்கவில்லை,'' என்பதாகும்.

———)o(———

## ஜீன் மெஸ்லியரின் ஜீவிய சரித்திரம்.

ஜீன் மெஸ்லியர் 1678-ம் ஆண்டில் மாஸர்னி என்னும் கிராமத்தில் பிறந்தார். இவரது தகப்பனுர் ஒரு நெசவுக்காரர். கிராமத்தில் வளர்ந்து வந்த போதிலும் ஜீன் மெஸ்லியர் தத்துவ சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களைப் படித்துப் படிப்படியாய் குரு ஸ்தானத்தை அடைந்தார். சிறு வயதிலிருந்தே நற்குணங்களும், நல்லொழுக்கங்களும் உடையவராதலால், அவர் குரு நிலைமையை அடைந்துங் கூட அதே குணங்கள் அவரிடத்தில் காணபட்டது ஆச்சரியமல்ல. அவர் தனது கடைமைகளில் சிறிதும் தவறுவதேயில்லை. தன் சம்பளத்தில் மீதிப் பட்டதை ஏழை களுக்குக் கொடுத்து உதவினுர். அவருடைய இரக்கமான மனதிற்கும், குறையாத அன்பிற்கும் அவருடைய வாழ்க்கையிலிருந்து பல திருஷ்டாந்தங்கள் கூறலாம்.

ஒரு சமயம் அவருடைய கிராமத்திலிருந்த பிரபு ஒருவர் சில விவசாயிகளைத் துன்புறுத்திய காரணத்திற்காக, ஜீன் மெஸ்லியர் அவருக்காகக் கடவுள் வணக்கம்

செய்ய மறுத்துவிட்டார். இவ்விஷயத்தை அப்பிரபு மேலதிகாரிக்குத் தெரிவித்து ஜீன் மெஸ்லியரைப் பல வழிகளிலும் கொடுமைப் படுத்தினர். 'ஏழைகள் பணக்காரர்களிடத்தில் படும் கஷ்டத்திற்கு நானே ஒரு உதாரணம். ஆனாலும், பிரபுவை கடவுள் மன்னிப்பாராக; ஏழைகளைத் துன்புறுத்தாதவாறு நல்ல குணங்கள் அவருக்கு அமையவேண்டுமென்பதே எனது விருப்பம்'', என்று ஜீன் மெஸ்லியர் பொறுமையாகப் பதிலிறுத்தார்.

ஜீன் மெஸ்லியர் 1733-ம் ஆண்டில் தனது 55-வது வயதில் காலஞ் சென்றார்.

அவர் இறந்ததும் சில கையெழுத்துப் பிரதிகள் அவரிடமிருந்து அகப்பட்டன. ஒவ்வொன்றும் 366 பக்கங்கள் கொண்டதாய் 3 நகல்கள் கொண்ட அப்பிரதிகள் முழுதும் அவரது கையாலேயே எழுதப்பட்டிருந்தன. அவைகளின்மேல் ''எனது மரண சாஸனம்'' என்று தலைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. இம்மூன்று நகல்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரிடம் போய்ச் சேர்ந்தது. கௌண்ட் கைலஸ் என்பவர் சில நாட்களுக்குள் அதில் 100 காப்பிகள் எடுத்துப் பாரிஸ் நகரில் பறவச் செய்தார்.

ஜீன் மெஸ்லியர் தான் எழுதிய மூன்று நகல்களையும் ஒரு பழுப்பு நிறமான காகிதத்தில் சுற்றிவைத்திருந்தார். அக்காகிதத்தின் மீது அவர் எழுதியிருந்ததாவது:—

''மனிதர்களுடைய அக்கிரமங்களையும், குற்றங்களையும், கொடுமைகளையும், அறிவீனச் செயல்களையும் என்

ஆயுள் முழுதும் கண்டுணர்ந்தேன். அவைகளை நான் ரொம்பவும் வெறுத்தேன். ஆனால் நான் இருந்த நிலையில் அவைகளை வெளிப்படையாய்ச் சொல்வதற்கான தைரியமும், சந்தர்ப்பமும் எனக்கில்லை என்பதை நான் கண்ட்மாய் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனாலும் நான் இறந்துபோவதற்கு முந்தியாவது நான் கண்ட உண்மைகளை உலகத்திற்குச் சொல்லிவிட்டு உயிர் விடவேண்டுமென்று நினைத்திருந்தேன். அந்த ஆசை நிறைவேறிவிட்டது. நானும் மனத்திருப்தியோடு உயிர் விடுகிறேன்.''

''நான் ஏதேனும் சொந்தப் பிரயோஜனத்தைக் கருதி இவ்வாறு மன மாற்றத்தையடையவில்லை என்பதை உங்களுக்கு உறுதியாய்க் கூறுகிறேன். ஆனால் எனது உணர்ச்சிக்கு முற்றிலும் மாறான ஒரு வேலையை ஏன் ஒப்புக்கொண்டேன் என்றால், ஏதாவது பொருள் திரட்டும் நோக்கத்தினாலல்ல. பின் எதனால் என்றால், எனது பெற்றோர்களுக்குக் கீழ்படிவது என் கடமை என்று நினைத்தேன். ஆனாலும் அதைவிட்டு வெளிப்பட்டு உண்மையை உறைத்துவிட வேண்டுமென்ற ஆசை எனக்குண்டு. ஆனால் முதலிலேயே அப்படிச் செய்திருந்தால், எனது முழு அபிப்பிராயத்தையும் உலகத்திற்குச் சொல்வதற்கு முன்பே நான் கொல்லப்பட்டிருப்பேன்.''

''கடவுள் கிருபையை விலைக்கு வாங்குவதற்காக வென்று பாமர ஜனங்கள் பணத்தைக் கொண்டு வந்து கொட்டியதை நான் வெறுத்தேன். பல சமயங்களில் அதை ஏற்றுக்கொள்ளவும் மறுத்தேன். ஐயோ! என்ன கொடுமை! பாமர ஜனங்கள் கண்மூடித்தனமாய்

குருவின் பாதத்தில் பணத்தைக்கொட்டி தங்களுக்காக கடவுளை வணங்குமாறு கேட்கிறார்களே, என்பது எனக்கு அவ்வளவு வருத்தமாயில்லை. ஆனால், படுபாவிகளான குருமார்கள் தாங்கள் செய்வது பெரும் ஏமாற்றம் என்பதை மனப்பூர்வமாக அறிந்திருந்தும் கூட பண ஆசையாலும், அதிகார அவாவினாலும் அதைச் சந்தோஷமாய் அனுமதித்துக்கொண்டும், அனுபவித்துக்கொண்டும் இருக்கிறார்களே, என்பதுதான் என் உடலை நடுங்கச் செய்கிறது குருமார்கள் தங்களுடைய நோகாத வாழ்க்கையை நினைத்து சந்தோஷப்பட்டாலும் படட்டும்; ஆனால் அதற்காகப் பாமர ஜனங்களை,—சூதுவாதறியாத ஏழை ஜனங்களை, மேலும் மேலும் குற்றங்கள் செய்யும்படி தூண்டுகிறார்களே, என்பதானது எனக்குச் சகிக்க முடியவில்லை.''

''ஓ! எனது கிராம ஜனங்களே! உங்களிடம் எவ்வளவு தடவைகளில் பணம் பெறாமல் போதித்தேன். இன்னும் ஒரு தம்பிடி கூட வாங்காமல் போதிக்கக்கூடிய சக்தியில்லையே என்று எத்தனை தடவை உங்கள் முன் கதறியிருக்கிறேன்! நினைத்துப்பாருங்கள்! உங்கள் மதத்திலுள்ள ஆபாசங்களை எத்தனை சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறேன்! பக்தி மார்க்கமான பொய் மூட்டைகளை உங்கள் தலையில் கட்டியடித்ததற்காக, எத்தனை தடவைகளில் நான் எனது மார்பை அடித்துக்கொண்டிருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? நானே நம் பாத விஷயங்களையெல்லாம் வெள்ளை மனதான உங்களை நம்பும்படி செய்தேனே, அக் கொடுமையை நினைந்து

நினைந்து எத்தனை தடவை வெட்கியிருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?

நான் செய்த மதப் புரட்டுகளை ஒரு பொது மேடையில் உங்கள் முன்பு சொல்லி மன்னிப்புக்கேட்டுக்கொள்ள வேண்டுமென்றுசுமார் ஆயிரந் தடவை முயற்சித்திருப்பேன். ஆனால் எனது பலத்தை மீறிய பயமானது இந்த நிமிஷம் வரையில் என் வாயை அடைத்துவிட்டது. நானும் உங்களை இருட்டிலேயே விட்டிருந்தேன். நான் ஒரு படுபாவி என்மே நினைக்கிறேன் மன்னியுங்கள். இந்த நிமிஷத்திலாவது உண்மையை, என் மனதில் இத்தனை வருஷமாய் அடைபட்டுத் திமிறிக்கொண்டிருந்த உண்மையை--உங்கள் முன் கொட்டிவிட்டுச் சாகின்றேன் கவனியுங்கள்.'' என்று சொல்லி உதாரணங்கள் மூலமாக விஷயங்கள் விளக்குகிறார்.

---

## 1. ஓர் நீதிக் கதை.

---

ஒரு பெரிய ராஜ்யம் இருக்கிறது அதை ஒரு அரசன் ஆண்டு வருகிறான். ஆனால் அவனுடைய நடத்தைகளோ அவனது குடிகள் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாதபடி அவ்வளவு குழப்பமாயிருக்கிறது. அவ்வரசனே தன்னை எல்லோருமறியவேண்டுமென்றும், நேசிக்கவேண்

டுமென்றும், கௌரவப்படுத்தவேண்டுமென்றும், கீழ்படிய வேண்டு மென்றும் விரும்புகிறான். ஆனால் அவன் தன்னைக்காட்டிக் கொள்வது மாத்திரம் கிடையாது. அவனைப்பற்றி நாம் வைத்திருக்கும் அபிப்பிராயங்கள் எல்லாம் சந்தேகத்திலேயே கொண்டுபோய் விடுகின்றன.

இந்த அரசனது ஆணைக்குக் கீழ்ப்பட்ட குடிகளோ தங்கள் கண்ணில் அகப்படாத இவ்வரசனுடைய குணம், கட்டளைகள் இவைகளைப்பற்றி அவனுடைய மந்திரிகள் என்ன சொல்லுகிறார்களோ அதைத் தவிர வேறொன்று மே தெரியமுடியாதவர்களாயிருக்கிறார்கள். இம் மந்திரிகள் சொல்வதும் சரியாக இருப்பது போலவே தோன்றுகின்றன. ஏனெனில் இம்மந்திரிகளுக்கே தங்களுடைய எஜமானனைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஏனென்றால், அவனுடைய செய்கைகள் காணமுடியாதவை; அவனுடைய குணங்கள், எண்ணங்கள் முதலியவைகளும் ஒருவராலும் அறியமுடியாதவைகளாகும். இன்னும் இந்த மந்திரிகளுக்குள்ளாகவே தங்களுடைய அரசனின் கட்டளைகளைப்பற்றி முற்றிலும் வேறுபாடான அபிப்பிராயங்களுண்டு.

ராஜ்யத்தின் ஒவ்வொரு ராஜதானியிலும் வெவ்வேறு விதமாக மந்திரிகள் இக்கட்டளைகளை வெளியிடுகிறார்கள். இந்த மந்திரிகள் தங்களில் ஒருவரையொருவர் அவமதித்துக்கொண்டும், ஒருவரையொருவர் வஞ்சகர்கள் போலவும், பொய்யர்கள் போலவும் நடத்திக்கொண்டுமிருக்கிறார்கள். இவர்கள் பிரசாரம் செய்கின்ற சட்ட திட்டங்களெல்லாம் நிச்சயமற்றதாகவே இருக்கின்

றன. இச்சட்ட திட்டங்கள் யாருக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றனவோ அந்தக் குடி ஜனங்களுக்கே அவை கள் புரியாத விதமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. கண் ணுக்குத் தென்படாத இவ்வரசனுடைய சட்டங்களுக்கு வியாக்கியான கர்த்தாக்கள் வேண்டியிருக்கிறது. ஆனால் இவைகளை வியாக்கியானம் பண்ணுகிறவர்களுக்குள்ளாக வே இவைகளினுடைய சரியான அர்த்தத்தைப் பற்றி அடிக்கடி சண்டைகள் நிகழ்கின்றன.

இதைவிட விசேஷம் என்னவென்றால், இவர்களில் ஒருவருக்கொருவர் அபிப்பிராயத்திலேயே முரண் படு கிறார்கள். இவர்களுடைய மறைவான அரசனைப்பற்றிச் சொல்லும் ஒவ்வொரு விஷயமும் முன்னுக்குப்பின் முர ணாகவே இருக்கிறது. ஒவ்வொரு வார்த்தையும் அந்தச் க்ஷணத்திலேயே ஆட்சேபிக்ககூடியதாகவே இருக்கிறது.

இவ்வரசன் ரொம்பவும் நல்லவன் என்று சொல்லப் படுகிறான்; ஆனாலும் அவனுடைய ஆக்கினைகளைப்பற்றி புகார் சொல்லாத ஒரு மனிதன்கூட கிடையாது அவன் அளவு கடந்த அறிவாளி என்று சொல்லப்படுகிறான்; அவனுடைய ஆட்சியில் ஒவ்வொன்றும் நியாயத்திற்கும், பகுத்தறிவுக்கும் விரோதமாகவே இருக்கிறது. அவனு டைய நியாயத்தைப் பற்றிப் பிரமாதமாகப் புகழ்கிறார் கள்; ஆனால் அவனுடைய குடிகளில் ரொம்ப நல்லவர் கள் தான் பெரும்பாலும் அதிகக் கஷ்டப்படுகிறார்கள். அவன் ஒவ்வொன்றையும் பார்த்துக் கொண்டிருப்பதாக உறுதி கூறுகிறார்கள்; ஆனால் அவனால் ஒன்றையும் பரி காரம் செய்யமுடியவில்லை. அவன் ஒழுங்கை நிலை நாட் டுகிறவனென்று சொல்லப்படுகிறது; ஆனால் அவனுடைய

ராஜியத்தில் ஒவ்வொன்றும் குழப்பமாகவும், தாறுமாறு கவுமே இருக்கிறது. சகலரும் அவனால் உண்டாக்கப் பட்டதாகச் சொல்லப்படுகிது; ஆனால் அவனுடைய எண்ணப்படி ஒன்றும் நடைபெறுமலே போகிறது. ஒவ் வொன்றையும் அவன் தீர்க்க தரிசினமாய்க் காண்பதாகக் கூறுகிறார்கள்; ஆனால் அவனது தீர்க்க தரிசினம் எதை யும் தடுக்கமுடியவில்லை. அவனை யாராவது கோபப்படு த்தினால், சீக்கிரம் பொறுமையை இழந்துவிடுகிறான். ஆனால் அதே சமயத்தில் ஒவ்வொருவரும் அவன் பேரில் கோபப்படும்படியாகவே நடந்துகொள்ளுகிறான். அவன் செய்துள்ள நூல்களின் குற்றமற்ற தன்மைக்காக அவ னுடைய அறிவை மெச்சுகிறார்கள். ஆனால் அவனு டைய நூல்கள் முழுதும் குற்றங்களே நிறைந்திருக்கின் றன. உண்டாக்குவதும், அழிப்பதும், தான் செய்ததைத் திருத்துவதும் இவைகள் சதா அவனது வேலைகளாயிரு க்கின்றன. ஆகவே தன்னுடைய வேலையில் சற்றும் திருப்தியில்லாதவனாகவே காணப்படுகிறான். அவன் செய்யும் சகல தொழில்களிலும் தனது சொந்தக் கீர்த்தி யையே நாடுகிறான். ஆனால் அதிலும் அவன் வெற்றி பெறுவதாகத் தெரியவில்லை. தனது குடி ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதியே அவன் வேலை செய்வதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அக்குடி ஜனங்களில் பெரும் பாலோருக்கு உயிரைக் காப்பாற்றுவதற்கான உணவுகூட கிடைப்பதில்லை. அவன் யாரை ஆதரிக்கவேண்டும் என்று விரும்புகிறானே அவர்கள்தான் அதிக துன்பத் தை அனுபவிக்கிறார்கள். அவனுடைய குடி ஜனங்க ளெல்லாம் எப்போது பார்த்தாலும் தங்கள் எஜமானன் மேல் அதிருப்தியோடவே இருக்கிறார்கள். ஆனால் அவ

னுடையப் பெருமையைப் புகழ்வதிலும், அவனுடைய அறிவைப் பாராட்டுவதிலும், அவனுடைய நல்லெண்ண த்திற்காக வணங்குவதிலும், அவனுடைய நடு நிலைமைக் காகப் பயப்படுவதிலும் மாத்திரம் குறைகிறதில்லை. அவனுடையக் கட்டளைகளுக்குக் கீழ்படியா விட்டாலும், அவைகளைப் பக்தியோடு பாராட்டுவதில் மாத்திரம் குறைவதில்லை.

இப்படிப்பட்ட ஒரு அரசனையும், மந்திரியையும், சட்டத்தையும், ஆட்சியையும் பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? இதுகாறும் சொல்லப்பட்ட ராஜியம் தான் இவ்வுலகம்; அதன் அரசன் என்பதுதான் கடவுள்; அவனுடைய மந்திரிகள் என்பவர்கள் தான் குருமார்கள். அவனுடைய குடி ஜனங்கள் தான் மனிதர்கள் என்று உணருங்கள்.

## 2 & 3. மதம் என்பது என்ன?

---

உலகத்தில் ஒரு சாஸ்திரம் இருக்கிறது. ஒருவருக்கும் ஒன்றும் புரியாத விஷயங்களைச் சொல்வதென்பதே அதன் லட்சியம். இதர சாஸ்திரங்களுக்கும், இதற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், இதர சாஸ்திரங்கள் கண்ணுக்குத் தெரிந்த விஷயங்களைப்பற்றிச் சொல்லும். ஆனால் இந்த சாஸ்திரமானது முழுதும் கண்ணுக்குத் தெரியாதவைகளைப் பற்றியே சொல்லும். இந்த சாஸ்திரத்தைப்பற்றி ஹாப்ஸ் என்பவர், "ஓர் இருண்ட பிரதேசம்" என்று கூறுகிறார். ஜனங்கள் தாங்கள் வசிக்கும் உலகத்தில் கையாளப்படுகின்ற சட்டதிட்

டங்களுக்கு முற்றிலும் முரணாக இருக்கின்ற சட்டதிட்டங்களே இந்த 'இருண்ட பிரதேசத்திலிருப்பவர்களால் கையாளப்படுகின்றன. இந்த அற்புதமான பிரதேசத்தில் வெளிச்சம் இருட்டாக இருக்கிறது. நல்ல அத்தாட்சிகளோடு நிரூபிப்பதெல்லாம் சந்தேகமாகவும், பிழையாகவும் தோன்றுகின்றன. முடியாத காரியங்களெல்லாம் நம்பக்கூடியதாகத் தோன்றுகின்றன. உண்மையென்பது பிரயோஜனமற்றதாய் விடுகிறது. பகுத்தறிவென்பது மயக்கமாய் மாறிவிடுகிறது.

மேலே சொன்ன சாஸ்திரம் தான் மதம் என்று சொல்லப்படும். இந்தமதந்தான் மனிதனுடைய பகுத்தறிவுக்குத் தொடர்ந்த அவமானத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

'ஆல், "ஆனல்," "ஒரு வேளை" முதலிய சந்தேகப் பதங்களை அடிக்கடி பிரயோகப்படுத்துவதின் மூலம் மனிதனுக்கு உண்மையாகத் தோன்றும் பல விஷயங்களையும், பரிசுத்தமான எண்ணங்களையுங்குழப்பக்கூடிய மாதிரியில் இந்த அபத்தமான மதம் என்னும் முறையைக் காப்பாற்றுவதற்கு முயல்கிறோம். இந்த அபத்தக் கோர்வையின் உதவியினல் இயற்கை முழுதும் மனிதனுக்கு புரியாத ஒரு தடுமாற்றமாக இருக்கிறது. கண்ணுக்குத் தெரிகிற உலகிற்குப் பதிலாக கண்ணுக்குத் தெரியாத உலகங்களைப் பற்றிய விவகாரம் வந்து விடுகிறது. பகுத்தறிவானது கற்பனைக்கு இடங் கொடுக்கும்படி நேர்ந்து விடுகிறது. இக்கற்பனையானது தானே உண்டாக்கிய மனோராஜ்யத்தில் நம்மைக் கொண்டுபோய் விட்டுவிடுகிறது.

## 4. மதம், கடவுள் ஆகியவைகள் இல்லாமலே மதனின் பிறக்கிறான்.

---

எல்லா மதக் கட்டளைகளும் கடவுள் நம்பிக்கையின் மீதே கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், தங்களுடைய ஐம்புலன்களில் ஒன்றாலும் அறியமுடியாத ஒன்றைப் பற்றி சரியான அபிப்பிராயங்களை மக்கள் அறிந்துகொள்வதற்கு முடியவில்லை. நமது எண்ணங்கள் முழுதும், நமக்குத் தோன்றும் வஸ்துக்களில் பிரதிபிம்பங்களேயாகும். அப்படியிருக்க, வஸ்துவில்லாத ஒன்றைப் பற்றி, அதாவது கடவுள் என்பதைப் பற்றி வைத்திருக்கும் எண்ணம் எதைக்குறிக்க முடியும்? காரணமில்லாமல் ஒரு காரியம் எப்படியிருக்கமுடியாதோ, அதைப் போலத் தானே இந்த எண்ணமும் அர்த்தமற்றதாக இருக்கிறது? மூலப்பிரதி, அல்லது, மாதிரி இல்லாத ஒன்றைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயமானது மனோ ராஜ்யத்தைத் தவிர வேறு என்னவாகத்தான் இருக்கமுடியும்? உண்மை இவ்வாறிருக்க மதக்காரர்கள் மாத்திரம் கடவுள் எண்ணம் என்பது இயற்கையிலேயே மனிதரிடத்தில் உண்டாகிறதென்று அதாவது, மனிதனுடைய பிறப்பிலேயே உண்டாகிறதென்று உறுதி கூறுகிறார்கள். ஒவ்வொரு கொள்கையும் ஒரு தீர்ப்பு அல்லது முடிவு என்று சொல்லவேண்டும். தீர்ப்பு அல்லது முடிவு என்பது அநுபவத்தினால் ஏற்படக்கூடியதாகும். அனுபவம் என்பது, ஐம்புலன்களினுடைய உதவியினாலன்றி வேறு எதனாலும் அடையமுடியாத ஒன்றாகும். ஆகவே இதிலிருந்து என்ன விளங்குகிறதென்

ருல், மதக்கொள்கைகள் என்பவைகளுக்கு மூலாதாரம் ஒன்றுமே கிடையாதென்பதும், அவைகள் மனிதனுக்கு ஏற்படக்கூடிய இயற்கையான எண்ணங்கள் அல்லவே அல்லவென்பதும் மேற்சொன்ன தர்க்கங்களை ஊன்றிப் படிப்போருக்கு விளங்காமற் போகாது.

## 5. கடவுள் நம்பிக்கை அவசியமா?

———)o(———

எல்லா மதங்களும் கடவுளினுடைய தத்துவத்தைப் பற்றியும், மனிதனுடைய தத்துவத்தைப் பற்றியும் இவ்விரண்டிற்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றியுமே கூறுகின்றன. இவ்விஷயங்களினுடைய உண்மையைத் தெரிய வேண்டுமானுல் கடவுள் தத்துவத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமல்லவா? ஆனுல் கடவுளினுடைய சூட்சமம் ஒருவராலும் அறிய முடியாதது. என்று எல்லோரும் சொல்லுகிருர்கள். பிறகு இப்படிச் சொல்பவர்களே அறியமுடியாத கடவுளுக்குக் குணங்கள் கற்பிப்பதில் சற்றும் தயங்குவதில்லை நினைக்கவே முடியாத இக்கடவுளைப் பற்றி மனிதன் கட்டாயம் தெரிந்து கொள்ளவேண்டியது கடமையென்றும் இவர்களே சொல்லுகிருர்கள். மனிதனுக்கு ரொம்பவும் புரியாத விஷயம் எதுவோ அதைப்பற்றி அறியவேண்டியதே ரொம்பவும் முக்கியமென்று கூறப்படுகிறது! கடவுள் விஷயமானது மனிதன் அறிவுக்கு அகப்படாததாக இருப்பதால் அதைப்பற்றி நினைக்காமலே இருப்பதுதானே அறிவுடைமையாகும். அப்படியிருக்க, மதமோ, ஒரு க்ஷணமாவது மனிதன் கடவுளை மறந்திருந்தாலும், அவன் குற்றவாளியென்று கூறுகிறது.

## 9 மதம் குருட்டு நம்பிக்கையின்மீதே கட்டப்பட்டிருக்கிறது.

வரம்புக்கு உட்பட்ட நமது மனிதனால் வரம்பில்லாத கடவுளின் குணங்களை உணர்தல் என்பது முடியாத காரியம என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதிலிருந்து விளங்குகிறதென்னவென்றால், வரம்பிலகப்பட்ட நமது மூளைக்காகக் கடவுள் என்பது கற்பிக்கப்படவில்லை என்பது வெளிப்படை. ஆனால் மதமோ அறியமுடியாத ஒன்றைப்பற்றி நாம் அவசியம் உணரவேண்டுமென்று வற்புறுத்துகிறது. இதிலிருந்து மதமென்பது மனிதனால் முடியாத ஒன்றை, வற்புறுத்தும் ஒரு கலை என்பது தெளிவாகும்.

## 7. எல்லா மதங்களும் அபத்தமே.

மதமானது மனிதனைக் கடவுளோடு சம்பந்தப்படுத்துகிறது. ஆனால் கடவுளோ முடிவற்றவர் என்று கூறப்படுகிறது. கடவுள் முடிவற்றவரானால், முடிவுள்ள எந்த ஜீவனும் அவரோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளமுடியாது; சொந்தம் பாராட்டவும் முடியாது. எப்பொழுது சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாதோ, அப்போது உணர்ச்சியிருக்கமுடியாது. கடமைகளும் எதுவும் இருக்கமுடியாது. ஆகவே, எப்போது கடவுளுக்கும், மனிதனுக்கும் மத்தியில் கடமைகள் ஒன்றுமில்லையோ அப்போதே மதமென்பது மனிதனுக்கு அவசிய

யில்லை என்பதும் ஏற்படுகிறது. எனவே, கடவுள் என்பவர் அழிவில்லாதவர் என்று சொல்லுவதானால், அழிவுள்ள ஜீவனாகிய மனிதனுக்கும், அதற்கும் எத்தகைய சம்மந்தமும் கிடையாது என்பது தானாகவே ஏற்பட்டு விடுகிறது. அழிவில்லாதது என்கிற எண்ணமே நமக்குப் புலப்படாததும், விளங்காததுமாக இருக்கிறது.

## 8. கடவுளைப்பற்றிய எண்ணத்திற்கே அர்த்தமில்லை.

கடவுள் அழிவில்லாதவர் என்றால் இவ்வுலகத்திலோ, அல்லது எவ்வுலகத்திலோ மனிதனுக்கும், அதற்கும் எந்தவித சம்பந்தமும் வைத்துக்கொள்ள முடியாது. இந்தக் காரணத்தால் கடவுளைப்பற்றிய எண்ணமே மனிதனுடைய மூளையில் நுழைய முடியாததொன்றாகும் என்பதும் ஏற்படுகிறது. மனிதனுடைய அழியுந் தன்மைக்கும், கடவுளினுடைய அழியாத் தன்மைக்கும் சம்பந்தப்படுத்த முடியாமலிருக்கிறபடியால், இவ்வுலகத்தில் எப்படி அக்கடவுளை அறியமுடியவில்லையோ, அதைப் போலவே தான் மறு உலகம் என்று சொல்லப்படுவதிலும் அறியமுடியாது. ஆகவே, மறு உலகம் என்பதிலும் கடவுளுணர்ச்சி என்பது மனிதனுக்குப் பொருந்தாததாகவே இருக்கிறது. எனவே கடவுள் மனிதருக்காக ஏற்பட்டதல்ல வென்பதும், சாதாரண மனிதனைவிட அதிக ஞானிகளாகச் சொல்லப்படும், ரிஷிகள், முனிவர்கள், தேவ தூதர்கள், மகாத்மாக்கள் என்பவர்களுக்குக் கூட கடவுள் என்பதைப்பற்றி யாதொன்றும் தெரிய முடியாது என்பதும் புலனாகின்றது.

## 9 மூட நம்பிக்கையின் மூலகாரணம்.

கடவுள் தன்மை இவ்வாறிருக்க எது அறிவதற்கு முடியவே முடியாதோ அதுவே மனிதனுக்கு மிக்க அவசியம் என்பதை அறிவுள்ள மனிதனிடத்தில் புகுத்தப்பட்டிருப்பது எப்படியென்பதை யோசிப்போம். இதற்குக் காரணம் என்னவென்றால் மக்களுடைய பயமேயாகும். எப்பொழுது மனிதன் பயப்பட ஆரம்பித்தானோ, அப்போதே அவனுடைய பகுத்தறிவை இழக்கிறான். ஏனெனில் பகுத்தறிவை நம்பக்கூடாதென்று அவன் கற்பிக்கப்படுகிறான். ஆகவே எப்பொழுது அறிவுக்குக் குழப்பம் ஏற்படுகிறதோ அப்பொழுதே ஒன்றையும் பரிசோதித்துப் பார்க்காமல் கண்மூடித் தனமாய் நம்ப ஆரம்பித்து விடுகிறான்.

## 10. மதம் எப்படி ஏற்பட்டது.

எல்லா மதங்களும் அறிவீனம், பயம் ஆகிய இவ்விரண்டு அச்சுகளில் சுற்றுகின்றன. கடவுளுக்கும், மனிதனுக்கும் இருக்கும் ஒரு நிச்சயமற்ற சம்பந்தத்தினால் தான் மனிதன் மதத்தையும் பிடித்துக்கொண்டிருக்கிறான். மனிதன் இருட்டிலிருக்கும் வரையில்—சரீர சம்பந்தமான இருட்டாயினும் சரி, மனது சம்பந்மான இருட்டாயினும் சரி அவன் பயங்காளியாகவே இருப்பான், அந்த பயமானது அவனுக்கு வழக்கமாகப் போய், நாளடைவில் ஒரு அவசியமாகவும் ஏற்பட்டுவிடுகிறது. தான் ஒன்றுக்கும் பயப்படாமலிருந்தால், ஏதோ ஒரு குறை இருப்பதாகவே நம்ப ஆரம்பித்துவிடுகிறான்.

## 11. மதத்தின் பேரால் வஞ்சகர்கள் பிழைப்பது.

———)o(———

எவனொருவன் தனது குழந்தைப் பருவத்திலிருந்தே ஏதோ சில வார்த்தைகளைக் கேட்கும்போதெல்லாம் பயந்து நடுங்கும்படியான பழக்கத்திலிருந்து வந்தானோ, அவன் ஆயுள் முழுவதும் அவ்வார்த்தைகளைக் கேட்கவும், கேட்டு நடுங்கவும் ஆசை கொண்டுவிடுகிறான். இவ்விதமாகவே பழகி, நாளடைவில் யாரார் அவனுடைய பயத்தை அதிகப்படுத்துகிறார்களோ அவர்கள் வார்த்தையைக் கேட்க விரும்புகிறானே யொழிய, யாரார் அவனுடைய பயத்தை அகற்ற எண்ணுகிறார்களோ, அவர்களுடைய வார்த்தைகளுக்கு செவி சாய்க்க விரும்பாமல் போய்விடுகிறான். மூட நம்பிக்கையில் அழுந்திய மனிதனென்றும் பயங்காளியாகவே இருக்க விரும்புகிறான்; அவனுடைய கற்பனை சக்தியும் அதை விரும்புகிறது. அவன் பயப்படாத எந்த வஸ்துவுமே கிடையாது என்பதும் ஏற்பட்டுவிடுகிறது. மனிதர்கள் கற்பனையால் ஏற்பட்ட நோயாளிகளை ஒத்திருக்கின்றார்கள்; இந்நோயாளிகளின் பலஹீனத்தை அறிந்த சுயநலமான போலி வைத்தியர்கள் தங்கள் போலி மருந்துக்கள் விலையாகும் பொருட்டு, இந் நோயாளிகளின் பலஹீனத்தை விர்த்தி செய்கிறார்கள். அதிக மருந்துக்களைக் கொடுக்கும் போலி வைத்தியர்களை இந்நோயாளிகள் கவனிக்கிறார்களேயொழிய, நல்ல பத்திய உணவையும், இயற்கை சிகிச்சை முறையையும் விதிக்கும் உண்மை வைத்தியர்கள் வார்த்தையைக் கவனிப்பதில்லை.

## 12 & 13 அற்புதத்தின் துணையால் மதம் அறிவீனத்தை வளர்க்கிறது.

மதமென்பது தெளிவானதாயிருந்திருந்தால் பாமர ஜனங்களுக்கு அதில் எவ்வித ப்ரேமையும் இருக்காது. பாமர ஜனங்களுக்கு இரகசியங்களிலும் அற்புதங்களிலும், கட்டுக் கதைகளிலும், அதிசயங்களிலும் நம்பமுடியாத விஷயங்களிலும் அதிகப் பிரியமுண்டு. ஏனெனில் அவைகள்தான் அவர்களுடைய மனதிற்கு எப்போதும் வேலை கொடுத்துக்கொண்டு இருக்கக்கூடியவை. உண்மைச் சரித்திரத்தை விட விசித்திரக் கதைகளும், சோம்பேரி புராணங்களும், பேய் பிசாசுகளைப் பற்றிய வரலாறுகளுமே மூட ஜனங்களுக்கு அதிக விருப்பத்தைத் தருகின்றன.

ஆகவே மனிதர்கள் மத விஷயத்தில் வயதில் மாத்திரம் முதிர்ந்த சிறு பிள்ளைகளுக்கே ஒப்பாவார்கள். ஒரு மதம் எவ்வளவுக்கெவ்வளவு ஆபாசமாகவும், அற்புதங்கள் நிறைந்ததாகவும் இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு, அது கொண்டாடப் படுகிறது. அந்த மதத்தில் ஈடு பட்டவர்கள் தங்களுடைய மூட நம்பிக்கைக்கு அளவேயில்லாத நிலைமையிலிருக்கிறார்கள். விஷயங்கள் எவ்வளவுக்கெவ்வளவு புரியாததாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு கடவுள் தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றன. அவை எவ்வளவுக்கெவ்வளவு நம்பமுடியாமலிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவைகளை நம்புவதில் மனிதன் தன்னைப் பாராட்டிக்கொள்ளுகிறான்.

## 14. மதமும் காட்டுமிராண்டித் தனமும்.

———)o(———

பொதுவாக மதங்களெல்லாம் உலகத்தில் காட்டு மிராண்டிகள் வசித்திருந்த காலத்தில் தான் ஆரம்பித்தன. அந்தப் பண்டைய காலம் முதல் மதஸ்தாபகர்கள் என்பவர்களெல்லாம் மிகவும் அநாகரீகமான மூட ஜனங்களுக்கே தங்கள் போதனையைச் செய்துகொண்டிருந்தார்கள். ஏனெனில் அவர்கள் தான் கடவுள்கள் என்பதிலும், சடங்குகள் என்பதிலும், கற்பனைத் தெய்வங்கள் மீதிலும், அற்புதமும் பயங்கரமுமான கட்டுக் கதைகளிலும் சீக்கிரம் நம்பிவிடக் கூடியவர்கள். இவ்விதக் கற்பனைகளெல்லாம் முன்னோர்களால் கண்மூடித்தனமாய் நம்பி ஏற்றுக்கொள்ளப்பட்டு பிறகு கூட்டியும் குறைத்தும் சொல்லப்பட்டு பிறகு சற்று அறிவு வந்த அவர்களுடைய சந்ததியர்களும் கூட தங்கள் முன்னோர்களைப் போலவே அவைகளைக் கண்மூடித் தனமாய் நம்பிக்கொண்டே வந்தார்கள்.

## 15 ஆதிக்கஞ் செலுத்தவே மதங்களுண்டாயின.

———)o(———

எந்த தேசத்திலும் முதன் முதல் சட்டம் செய்தவர்களெல்லாம் பிறர்மேல் ஆதிக்கம் செலுத்துவதையே தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். இந்த நோக்கத்தில் சுலபமாய் வெற்றி பெறவேண்டுமானால் ஜனங்களைப் பயமுறுத்தி அவர்களை எதையும் ஆலோசனை செய்ய முடியாமல் செய்யவேண்டியதே சிறந்த முறை

யென்பதையும் உணர்ந்தார்கள். ஆகவேத ங்களுடைய தூர் எண்ணங்களை ஜனங்கள் அறியமுடியாதபடி பயங்கரமான பாதைகளில் அவர்களுடைய புத்தியைச் செலுத்தினார்கள். ஜனங்கள் எங்கே தங்களுடைய பாதங்களை (இவ்வுலகத்தைப்) பார்த்துவிடுவார்களோவென்று பயந்து ஆகாயத்தை (மேல் உலகம்) பார்க்கும்படி கட்டாயப் படுத்தினார்கள். ஆனால் நேரில் சந்தித்தபோது மாத்திரம் கதைகளைச் சொல்லி திருப்திப் படுத்தினார்கள். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் ஆயாள் (நர்ஸ்) எப்படி குழந்தைகளைத் தூங்கவைப்பதற்குப் பாட்டுகளை உபயோகப்படுத்தியும், விஷமம் செய்யாமலிருப்பதற்குப் பயமுறுத்தவும் செய்கிறாளோ அதைப்போலவே தான் இம்மதஸ்தாபகர்களும் செய்தார்கள்.

## 16. மதத்தின் அஸ்திவாரமே ஆடுகிறது.

கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதே எல்லா மதங்களுக்கும் அஸ்திவாரமாகும். இதைப் பற்றி பெரும்பாலோர் சந்தேகப்படுவதே கிடையாது. ஆனால் இந்த முக்கியமான விஷயந்தான் ஒவ்வொரு மனிதனையும் யோசித்துப் பார்ப்பதினின்றும் தடை செய்கிறது. வினாவிடைகளாக உள்ள எந்த விஷயத்திலும், முதல் கேள்விக்குத்தான் பதில் சொல்வது கஷ்டம்.

## 17 & 18. கடவுள் இருப்பதை ருசுப்படுத்த முடியுமா ?

"விபரமறிய முடியாத ஒன்று, பஞ்சேந்திரியங்களாலும் உணரமுடியாத ஒன்று, ஆனால் அதனுடைய குணங்களை மாத்திரம் நம்மால் சொல்லமுடியாது" என்றுவர்ணிக்கப்படும்—ஒரு வஸ்த்து-ஜீவன் இருப்பதாக நீ ருசுவுடன் ஒப்புக்கொள்ளுகிறாயா ? என்பதை யோக்கியமாய் உன்னால் சொல்லமுடியுமா ?

யோசித்துச் சொல்லு. இத்தகைய ஒரு ஜீவன் இருக்கிறது என்றோ, அல்லது இருக்கக் கூடுமென்றோ நான் நம்பவேண்டுமென்றால் இந்த ஜீவன் என்னவென்பதை முதலில் நான் அறிந்து கொள்ளவேண்டாமா ?

அப்பேர்பட்ட ஒரு ஜீவன் இருக்கின்றதென்றோ, இருக்கலாமென்றோ நான் நம்பவேண்டுமானால், அந்த ஜீவனைப்பற்றி முன்னுக்குப்பின் முரணில்லாத விஷயங்களாக எனக்குச் சொல்லவேண்டாமா ?

கடைசியாக, இந்த ஜீவனைப்பற்றி நான் பரிபூரணமாக நம்பவேண்டுமென்றால், அதைப்பற்றி சொல்லும் விஷயங்கள் எனக்குப் புரியக்கூடியதாகவாவது இருக்க வேண்டாமா ?

இத்தகைய குணங்களையுடைய ஒரு ஜீவன் அவசியம் இருந்தே தீரவேண்டும் என்பதை நான் நம்பும்படி ருசுப்படுத்தவேண்டாமா ?

நாம் ஒரே சமயத்தில் நினைக்கமுடியாத அவ்வளவு முரண்பாடுடையதான இரண்டு கருத்துக்களைக் கொண்ட ஒரு விஷயம் நிச்சயமாயிருக்கவே முடியாது. நம்முடைய பஞ்சேந்திரியங்களிலிருந்து தான் எல்லா எண்ணங்களும் உண்டாகின்றன. ஆகவே இப் பஞ்சேந்திரியங்களால் உணரமுடியாத எதுவும் உண்மையென்று ருசுப்படுத்த இயலாது. ஒன்றுக்கொன்று பொருத்தமிருக்கிறதா இல்லையாவென்ற விஷயத்தையும் இப்பஞ்சேந்திரியங்களாலேயேதான் அறியமுடியும். எது ஒன்று கட்டாயம் இருக்கிறது என்று ருசுப்படுத்தப்படுகிறதோ, அதையே 'இல்லை' என்றும் ருசுப்படுத்துவதென்பது பெரும் அபத்தமாகவே முடியும். உலகமே ஒப்புக்கொள்ளுகின்ற மேற்கண்ட உண்மைத் தத்துவங்கள் கடவுள் விஷயத்தில் மாத்திரம் பொய்யாக முடிகின்றன. ஏனெனில் கடவுளைப்பற்றிச் சொல்லப்படும் சகல விஷயங்களும் ஒன்று விளங்காததாகவோ, அல்லது முற்றிலும் முரண்பட்டதாகவோ தானிக்கின்றன. ஆகவே இந்தக்காரணங்களால் கடவுள் என்ற ஒன்று இருக்கவேமுடியாது என்பது பகுத்தறிவுடைய எவருக்கும் கட்டாயம் தோன்றியே தீரும்.

## 19. கடவுள் நிரூபிக்கப்படவேயில்லை.

பொதுவாக எல்லா மக்களுக்கும் பகுத்தறிவு ஏறக்குறைய சமமாகவே இருக்கிறது. ஆனால் இந்தக் கடவுளைப் பற்றிய சாஸ்திரம் மாத்திரம் ஜனங்களுக்கு நன்கு விளக்கப்படாமலிருப்பதற்கு என்ன காரணமோ? அதிக

நாகரீகமடைந்த தேசங்களும், மிகுந்த யோசனை சக்தியுள்ளவர்களும் கூட இவ்விஷயத்தில் மிகக் காட்டுமிராண்டிகள், தற்குறிகள், அறிவீனர்கள் முதலியவர்களைப் போலவே தானிருக்கிறார்கள். இந்த விஷயத்தை நாம் நெருங்கிப் பார்க்கப் பார்க்க, கடவுள் சாஸ்திரமானது வெறும் கற்பனைகளாலும், மனோராஜ்யத்தாலுமே கட்டப்பட்டிருக்கிறதென்பது புலப்படும். ஆகவே மதங்கள் என்பவைகள் எல்லாம் தர்க்க சாஸ்திரத்தில் "கேள்வியைக் கெஞ்சுவது" என்னும் முறையில்லாத தர்க்கத்தையே அஸ்திவாரமாகக் கொண்டிருக்கிறது. அதாவது இல்லாத ஒரு விஷயத்தைக் கற்பித்துக் கொண்டு அதிலிருந்து தர்க்கம் செய்து முடிவு செய்வதென்பதே மதங்களின் வேலையாகும்.

## 20. கடவுளென்பது ஆத்மாவா?

மனோ தத்துவ சாஸ்திரப்படி கடவுள் என்பது ஒரு ஆத்மாவென்று சொல்லப்படுகிறது. ஆனால் தற்காலத்து மத சாஸ்திரமானது பண்டைய காலத்துக் காட்டுமிராண்டிகளின் மத சாஸ்திரத்தைவிட ஒரு படியாவது மேலேறியிருக்கிறதா? என்பதே கேள்வி. காட்டுமிராண்டிகள் இவ்வுலகத்திற்கே யஜமானனான ஒரு ஆத்மா இருக்கிறதென்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். இப்போதிருக்கும் அறிவீனர்களைப்போலவே காட்டுமிராண்டிகளும் தங்களுடைய அனுபவக் குறைவினால் உண்மையை அறியமுடியாத விஷயங்களையெல்லாம் 'ஆவி' அல்லது 'ஆத்மா' விற்கே காரணமாக்கினார்கள். இதற்கு

உதாரணம் வேண்டுமானுல், இப்போதுகூட ஒரு காட்டு மிராண்டியினிடத்தில் ஒரு கெடியாரத்தைக்காட்டி, அதற்குள் சத்தம் போடுகிறது என்னவென்று கேட்டுப்பாருங்கள். உடனே ஆவி என்றே பதில் சொல்வான். இதேமாதிரி நமது தத்துவ சாஸ்திரிகளைக் கூப்பிட்டு, இந்த உலகம் ஏன் அசைகிறதென்று கேளுங்கள். ஆவி என்றே பதில் சொல்லுவார்கள்.

## 21. ஆத்மா என்பது ஒரு மனோராஜியம்.

———)o(———

காட்டுமிராண்டி சொல்லும் 'ஆவி' என்பதிலாவது சிறிது அர்த்தமிருக்கிறது. ஏனெனில் அவன் 'ஆவி' என்று சொல்லும்போது ஏதோ காற்றைப்போல ஒரு வஸ்துவென்றே, அல்லது மூச்சு விடுவதைப்போன்றதென்றே நினைத்துக்கொண்டாவது இருக்கிறுன். ஆனுல் நமது தற்கால தத்துவ ஞானிகளோ, தாங்கள் சொல்லும் 'ஆவி'க்குத் தங்களுக்கு விளங்காமலிருக்கும்படியான அர்த்தத்தையே சொல்லுவார்கள். அவர்களை கூப்பிட்டு "ஆத்மா" என்றுல் என்ன என்று கேட்டுப்பாருங்கள். அது அறியமுடியாத ஒரு வஸ்துவென்றும், ஆனுல் வெகு சாதாரணமானது என்றும், எந்த ஜடபதார்த்தத்தோடும், சம்பந்தப்பட்டதல்லவென்றும் சொல்லுவார்கள். இப்போதும் கேட்கிறேன் இத்தகைய ஒரு வஸ்துவைப் பற்றி எந்த மனிதனுவது ஒரு அணுவளவாவது நினைக்கமுடியுமா என்பதைச் சொல்லுங்கள். நன்கு யோசித்துச் சத்தியமாகச் சொல்லுங்கள். ஆகவே தற்கால மத சாஸ்திரத்தின் அகராதியில் "ஆத்மா" அல்-

லது "ஆவி" என்றால் "சூன்யம்" "பூஜ்யம்," "அபத்தம்" என்பதே பொருளாகும். எனவே, "ஆத்மா"வைப் பற்றிய அபிப்பிராயமானது "கடவுளை"ப்பற்றிய அபிப்பிராயத்தைப் போலவே "மாதிரி"யில்லாத கருத்தேயாகும்.

## 22. திடபதார்த்தமே எதற்கும் மூலகாரணம்.

———)o(———

உலகத்திலுள்ள சகல விஷயங்களும் ஒரு திட பதார்த்தத்திலிருந்தே உண்டாயிருக்கவேண்டுமென்பதே உண்மையும் இயற்கையுமாகும். ஏனெனில் திடபதார்த்தமானது நமது பஞ்சேந்திரியங்களால் உணர்ந்து ருசுப்படுத்தக்கூடியது. அதன் பலன்களை நாம் ஒவ்வொரு நிமிஷமும் உணரமுடிகிறது. ஆகவே இதை விட்டுவிட்டு, உலகத்திலுள்ள சகல வஸ்துக்களையும் உண்டாக்கியது அறியமுடியாத ஒரு சக்தியென்றும், ஒரு ஆத்மா என்றும் சொல்லுவது எவ்வளவு அபத்தமேன்பது புலப்படவில்லையா? ஏனெனில், அஸ்திவாரமில்லாத ஒன்று, உருவம், குணம் இல்லாத ஒன்று, ஆத்மா, அதாவது சூன்யம் என்று சொல்லப்படும் ஒன்று—எதையாவது சிருஷ்டிக்கவோ, அசைக்கவோ முடியுமா வென்பதை யோசித்துப்பாருங்கள். ஆகவே பரிசிக்கமுடியாத ஒரு சூன்யமானது எதையும் சாதிக்கமுடியாது என்பது விளங்கவில்லையா?

## 23 தற்கால மதங்கள் சொல்லும் கடவுள் என்பது என்ன?

நமது முன்னோர்கள் சிருஷ்டித்த கடவுள்களாவது ஆக்கவும், அழிக்கவும் இன்னும் பிறகாரியங்களைச் செய்யக்கூடியனவாகவும் இருந்தன. ஆனால் தற்கால மதங்களால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் கடவுள்களோ பலஹீனமும், பேடித்தனமும் கொண்டவைகளாகவே இருக்கின்றன. கடவுளைப் பற்றிக் கூறியிருப்பதைக் கொண்டு பார்க்கப் போனால், இக்கடவுளால் ஒரு இடத்தில் இருக்கமுடியாத ஒரு வஸ்துவை அசைக்கமுடியாது; ஒரு உலகத்தை—அதாவது கண்ணால் பார்க்கக்கூடிய உலகத்தை—சிருஷ்டிக்கவுமுடியாது; மனிதர்களையோ, குட்டித் தெய்வங்களையோ, மகாத்மாக்களையோ, ரிஷிகளையோ, தேவர்களையோ உண்டாக்கவும் முடியாது. ஆகவே இந்த மனோதத்துவக் கடவுளானது இரண்டு கைகளுமில்லாத ஒரு தொழிலாளியைப் போன்றதே யாகும். அதனால்தான் இந்தக் கடவுளால் சிருஷ்டிக்கப்படுவதெல்லாம் சந்தேகங்களும், அபத்தங்களும், மயக்கங்களும், முட்டாள்தனங்களும், சண்டைகளும், புறட்டுகளும், அர்த்தமற்ற ஆபாசங்களுமாகவே இருக்கின்றன.

## 24. சூரியவணக்கத்திலாவது சிறிது அர்த்தம் உண்டு.

மனிதனுக்குக் கடவுள் என்ற ஒன்று வேண்டியது அவசியமாயிருந்திருந்தால் கண்ணுக்குத்தெரியும் கடவுளும் எல்லா ஜனங்களாலும் பூஜிக்கப்படுவதுமாகிய சூரியனை ஏன் கடவுளாக வைத்துக்கொள்ளவில்லை? உலகத்திற்கே வெளிச்சத்தையும், உஷ்ணத்தையும் கொடுக்கக் கூடிய ஒரு வஸ்துவை விட மனித சமூகத்திற்கு நன்மை செய்வது ஏதாவதிருக்கிறதா? எல்லா ஜீவன்களுக்கும் உயிர் கொடுப்பது அந்தச் சூரியனல்லவா? இயற்கையை உயிர்ப்பித்து அழகுபடுத்துவது சூரியனல்லவா? சூரியன் மறைந்ததும் இயற்கையே மறைந்து அதன் அழகே குன்றிவிடவில்லையா? எனவே, மனித சமூகத்திற்கு சக்தியையும், பெருமையையும், சுறுசுறுப்பையும், பெரிய எண்ணங்களையும் கொடுத்துதவுகின்ற சூரியனையல்லவா இயற்கைக்கெல்லாம் மூலகாரணமாய்க் கொள்ளவேண்டும்? அதையல்லவா, உலகத்தின் உயிர் நாடியாகக் கொள்ளவேண்டும்? ஆகவே, அதையல்லவா கடவுளாகக் கொள்ளவேண்டும். இப்படிச் சொல்வதில் சிலர் சிரிக்கலாம். இதில் ஒன்றும் அதிக மௌட்டீகத் தன்மையில்லை. ஏனெனில் இந்தக்கடவுள் இருப்பதையாவது நாம் கண்ணால் பார்க்கிறோம். அதன் பலனையாவது நாம் அனுபவிக்கிறோம். உணர்கிறோம். ஆனால்,—

## 25. நீங்கள் சொல்லும் ஆன்மாவான கடவுளோ?

மதப்பற்றுடையவர்கள் கடவுளைப் பற்றி சொல்வதென்ன? கடவுளானவர் கை, கால் இல்லாமலே எதையும் செய்யக்கூடியவராம்! அவர், தன் மனோ சக்தியின் படியே எதையும் செய்து முடித்துவிடுகிறாராம்! அப்படியானால் நான் ஒன்று கேட்கிறேன்.

இந்த 'மனோ சக்தி' என்பதையுடையதாகச் சொல்லப்படும் இக்கடவுள் என்பது என்ன? அந்த 'மனோ சக்தி தான் எதைப்பற்றியதாக இருக்கக்கூடும்? யோசித்துச் சொல்லுங்கள். நாம் பிசாசுகளிலும், மோகினிகளிலும், கந்தர்வர்களிலும், கொள்ளிவாய்ப் பிசாசுகளிலும், தேவர்களிலும், ராக்ஷதர்களிலும் நம்புவதற்கும் இத்தகைய ஒரு ஆத்மாவான கடவுளுக்கும் ஒரு வஸ்துவுக்கும் சம்பந்தமிருப்பதாக நம்பும் அறிவீனத்திற்கும் ஏதாவது வித்தியாசமிருக்கிறதா என்பதை எண்ணிப்பாருங்கள். அபத்தத்தில் இரண்டும் ஒன்றுதான். ஆகவே, எப்பொழுது இத்தகைய ஒரு அர்த்தமற்ற கடவுளை ஒப்புக்கொள்ள ஆரம்பித்து விடுகிறோமோ, அந்த நிமிஷத்திலிருந்தே, அது சம்பந்மான கட்டுக்கதைகளிலும், பொய் மூட்டைகளிலும், புராணப் புரட்டுகளிலும், கற்பனைக் களஞ்சியங்களிலும் நம்ப ஆரம்பித்துவிடுகிறோம். மதக்காரர்கள் என்பவர்கள் பாமர மக்களைக் குழந்தையை நடத்துவதுபோல் நடத்துகிறார்கள். எப்படிக் குழந்தைகள் தாங்கள் கேட்கும் கதைகளைப் பற்றி சந்தேகப்

படாமலிருக்கும்படி செய்கின்றோமோ, அதைப்போல வேதான் மதக்காரர்களும் பாமர மக்களிடத்தில் நடந்து கொள்ளுகிறார்கள். (குழந்தையிடத்தில் 'பூச்சாண்டி' என்கிறோம். மதக்காரர்கள் 'கடவுள்' என்கிறார்கள்.)

## 26. கடவுள் என்றால் என்ன?

கடவுள் என்ற ஒன்று இருப்பதாகச் சொல்லுவதை மறுக்கவேண்டுமென்றால், செய்யவேண்டிய காரியம் ஒன்றுதான். மதக்காரனைக் கூப்பிட்டு, "நீ சொல்லும் கடவுளை சற்று வர்ணி; பார்க்கலாம்" என்று சொன்னால் போதும். அவன் முதல் வார்த்தை சொல்ல ஆரம்பித்த வுடனேயே, அவன் சொல்லும் வார்த்தைக்கும் கடவுள் என்பதன் கருத்துக்கும் முற்றிலும் முரண்பாடாக இருப் பதைக் கண்டுகொள்ளலாம். ஆகவே, மறுபடியும் கேட்கி றேன். இந்தக்கடவுள் என்பது என்ன? சொல்லுங்கள் நம்மால் அறியமுடியாத இயற்கைத் தத்துவங்களைக் குறி ப்பிடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அர்த்தமற்ற வார் த்தையேயாகும். அல்லது, நீளம், அகலம், கனம் இல் லாத கணித சம்பந்தமான ஒரு புள்ளியோ என்னவோ? இதனால் தான் டேவிட் ஹ்யூம் என்ற தத்துவ ஞானி, மதக்காரர்களைப் பற்றிச் சொல்லும்போது கீழ் வருமாறு வெகு வேடிக்கையாகச் சொல்லியிருக்கிறார்:—

"ஆர்கிமெடீஸ் என்பவர் (ஒரு பிரபல விஞ்ஞான சாஸ்திரி) உலகத்தை அசைக்கக்கூடிய ஒரு புள்ளி எது என்று நீண்ட காலம் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்

தார். நமது மதஸ்தர்கள் அதுதான் 'கடவுள்' என்று கண்டுபிடித்துவிட்டார்கள்! (எவ்வளவு சிரமமான ஆராய்ச்சி பாருங்கள்!)''

## 27. மதத்திலிருக்கும் முரண்பாடுகள்.

———)o(———

உயிர், உடல், உருவம் இல்லாத ஒன்று; ஆனால் அளவிடமுடியாமல் எங்கு நிறைந்த ஒன்று; சர்வ வல்லமையான ஒன்று; ஆனால் தான் விரும்புவதைச் செய்யச் சக்தியில்லாத ஒன்று; ஜீவகாருண்யமே உருவான ஒன்று; ஆனால் வருத்தத்தையே எல்லாருக்கும் கொடுத்திருக்கும் ஒன்று; சமாதானத்தையே கோரும் ஒன்று; ஆனால் தன் ஆட்சியிலுள்ள எல்லாவற்றையும் குழப்பத்திலேயே வைத்திருக்கும் ஒன்று:—இத்தகைய ஒன்று இருப்பதாகவும் அதற்குமுன் மண்டி போட்டு வணங்க வேண்டுமென்றும், எல்லா மதங்களும் சொல்லுகின்றன. ஆகவே இவ்வளவையும் தெரிந்த நாம் இந்த மதங்கள் சொல்லும் கடவுள் என்பது என்னவென்பதை இனி விபரமாய் ஆராய்வோம்.

## 28. கடவுளென்பது கட்டுக்கதை.

———)o(———

மதக்காரர்களெல்லோரும் இந்தவிதமான சங்கடங்களிலிருந்து சுலபமாக தப்பிப்பதற்காக, கடவுள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டியதே அவசியமில்லையென்று சொல்லிவிடுகிறார்கள். நாம் தெரிந்துகொள்ளாமலே வணங்கவேண்டுமென்கிறார்கள். அவருடைய

குணுதிசயங்களைப் பற்றி கவனிப்பது குரும்புத்தனம் என்றும், அவைகளைப்பற்றி கவனிப்பதற்கு நமக்கு எவ்வித அதிகாரமுமில்லையென்றும் சொல்லுகிருர்கள். அப்படியே அவரைத் தெரிந்துகொள்ளாமலே வணங்கவேண்டுமென்று வைத்துக்கொண்டாலும், அவர் இருப்பதைப் பற்றியாவது நாம் நிச்சயமாய் தெரிந்துகொள்ளவேண்டாமா? மேலும் அவ்வரைப்பற்றி சொல்லப்படும் முரண்பாடான குணங்களெல்லாம் அவரிடம் பொருந்தியிருக்க முடியுமா என்பதை ஆராய்ச்சி செய்வதற்குமுன் அவர் இருப்பதைப்பற்றி எப்படி கூறமுடியும்? ஆகவே உண்மையைக் கூறவேண்டுமானுல், கடவுளை வணங்குவதென்பது தன் மூளையின் கற்பனையை வணங்குவதேயாகும். அல்லது பூஜ்யத்தை வணங்குவதாகும்.

## 29. ஆகவே நாஸ்திகம்தான் சரி.

விஷயத்தை இன்னும் குழப்பத்தில் விடுவதற்காக ஆஸ்திகர்களெல்லாம் கடவுள் என்ன என்பதைப்பற்றி தாங்கள் ஒன்றும் சொல்லாமல் இருப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். ஆனுல் அந்தக் கடவுள் எப்படி 'இல்லை' என்பதை மாத்திரம் நமக்குச் சொல்லுகிருர்கள். இவ்விதம் எதிர்மறைகளாலும், மனேகற்பிதங்களினுலும் சொல்லுகின்ற ஒன்றை உண்மையானதென்றும், பரிபூரணமானதென்றும் தாங்களாகவே நினைத்துக் கொள்ளுகிருர்கள். ஆனுல் உண்மையில் இவ்விஷயம் அவர்களுடைய மனக்கற்பனையேயொழிய வேறில்லை என்பது நன்கு விளங்கும். ஒரு ஆத்மாவிற்கு தேகம்

என்பது கிடையாது. எல்லையற்றதென்பது எல்லையுடையதாயிருக்க முடியாது. பரிபூரணம் என்று சொல்லப்படுவது பரிபூரணக்குறைவாய் இருக்க முடியாது. ஆகவே இவ்வளவு எண்ணிறைந்த குறைகளையுடைய ஒன்றைப் பற்றியாவது, விஷய சூன்யமாய் இருக்கும் ஒன்றைப் பற்றியாவது யாராவது ஒரு உண்மையான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கமுடியுமா? என்பதை யோசித்துப்பாருங்கள். எது ஒன்று எண்ணத்தையே கடந்து நிற்கிறதோ அது சூன்யம் அல்லது பூஜ்யத்தைத் தவிர வேறேதாவது இருக்கமுடியுமா? மிகப் பெரிய கடவுளின் குணாதிசயங்களானது கேவலம் மனிதனுடைய புத்திக்கு எட்டாதது என்று சொல்லப்படுமேயானால் கடவுள் மனிதனுக்குச்சற்றும் பிரயோஜனமேயில்லையென்பது தானாகவே ஏற்பட்டுவிடுகிறது. கடவுளானவர் எல்லையற்றவர் என்று கூறப்படுமேயானால் அவருக்கும், அவருடைய ஜீவன்களுக்கும் எந்த சம்பந்தமும் இருக்கமுடியாது என்பதை நாமே ஒப்புக்கொண்டு தீர வேண்டும். ஆகவே கடவுளை எல்லையற்றவர் என்று சொல்வதானது மனிதர்களுக்காக, அவரைக் கொன்றதாக, ஆகும்! அல்லது குறைந்தபக்ஷம் மனிதர்களுக்கு அவரால் எவ்வித பலனுமில்லை என்றாவது ஏற்படும்.

கடவுள் மனிதனை அறிவுடையவனாகப் படைத்தான் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சகலமும் அறியக்கூடியவனாகப் படைக்கவில்லையே! அதாவது எல்லா விஷயங்களையும் உணரக்கூடியவனாகப்படைக்கவில்லையோ இதிலிருந்து ஏற்படுகிறது என்னவென்றால், கடவுளின் தத்துவத்தை உணர்ந்துகொள்ளவேண்டிய அறி

வோடு மனிதனைப் படைப்பதற்குக் கடவுளால் முடிய வில்லையென்பதேயாகும். எனவே மனிதன் கடவுளை அறியும்படியாகச் செய்யும் சக்தியும் அவரிடமில்லை. அறியவேண்டுமென்ற விருப்பமுமில்லை என்பது ருசுவா கிறது. மனிதனுடைய தத்துவமானது கடவுளின் தத் துவத்தை உணர்ந்துகொள்ள முடியாத இயற்கையோடு அடைந்திருக்கும்போது மனிதர்களிடத்தில் கோபித்துக் கொள்வதற்கு கடவுளுக்கு என்ன நியாயம் இருக்கிறது? இயற்கையாகவே மனிதன் கடவுள் தத்துவத்தை உணர முடியாமலிருக்கும்போது அதற்காக நாஸ்திகர்களைக் கடவுள் தண்டிப்பதாயிருந்தால் அவர் ரொம்ப அநீதிவா ளுகவும், சகிக்க முடியாத கொடுங்கோலனுகவுமே இருக் கவேண்டும்.

## 30. நாஸ்திகம் குற்றமல்ல.

பெரும்பாலான பாமர மக்களுக்குப் பயம் என்பதை விட முடிவான தர்க்கங்கள் எதுவுமே கிடையாது. இந் தக் காரணத்தால் மதக்காரர்கள் எல்லோரும் நம்மை ஜாக்கிறதையான வழியிலேயே போகவேண்டுமென்று சொல்லுகிருர்கள். நம்பாமலிருப்பதைவிடக் கொடுமை யான காரியம் எதுவுமே இல்லை என்கிருர்கள். கடவு ளிருப்பதைப்பற்றி சந்தேகப்படுகிறவர்களையெல்லாம் கொஞ் சங்கூட இரக்கமில்லாமல் தண்டிப்பார் என்று சொல் லுகிருர்கள். அவர் அப்படிக் கொடூரமாய் நடத்துவது நியாயமென்கிருர்கள். நாஸ்திகர்களைப் பழிக்குப்பழிவா ங்கும் ஒரு கோபமான அரசனுடைய செய்கையைப்பற் றிக் கேட்பதென்பது பைத்தியகாரத்தனமேயாகுமென்று

சொல்லுகிறார்கள். இக்கூற்றுகளைப் பொறுமையாய் ஆராய்ந்து பார்ப்போமானால் எது ருசுப்படுத்தவேண்டு மோ அதே கற்பித்துக் கொள்ளப் பட்டிருக்கிறதென்பது தெளிவாகும். கடவுளை நம்புவதுதான் சௌகரியம். சந்தேகத்தாலோ, அல்லது மறுத்தாலோ ஆபத்துண்டா குமென்று நம்மிடம் சொல்வதற்கு முந்தி, முதலாவதாக அவ்விதம் சொல்பவர்கள் நாம் திருப்திப்படும் வரையில் கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார். என்பதை ருசுப்படு த்தவேண்டியது அவசியமாகும். பிறகு மனிதன் தன் னுடைய விசேஷ அறிவினால் கூட அறிந்துகொள்ளமுடி யாமலிருக்கும் ஒரு கடவுளைப்பற்றி சந்தேகப்படக்கூடிய ஒரு பைத்தியமான நிலைமையிலிருப்பதற்காக அவனைக் கடவுள் தண்டிப்பது நியாயந்தான் என்பதை ருசுப்படு த்தவேண்டும். அதாவது, சுருங்கக் கூறவேண்டுமானால் நியாயமே உருவமாக இருப்பதாகச் சொல்லப்படும் ஒரு கடவுள், கடவுள் தத்துவமென்பதை அறியவேமுடியாத அவசியத்திலிருக்கும் மனிதனைக் கொடுமையாகத் தண் டிப்பதின் நியாயத்தை ருசுப்படுத்த வேண்டும். ஆஹா! மதக்காரர்களின் தர்க்கம் எவ்வளவு வேடிக்கையாக இரு க்கிறது பாருங்கள்! அவர்களே சிலக் கட்டுக்கதைகளைக் கட்டிவிடுகிறார்கள்; பிறகு முன்னுக்குப் பின் முரணான விஷயங்களையும் அவைகளோடு பிணைத்துவிடுகிறார்கள்; பிறகு தாங்களே கட்டிய புறட்டுகளை நம்பாமலிக்கக் கூடாது என்று பயமுறுத்துகிறார்கள். இந்த முறைப் படி நடப்பதாயிருந்தால் எந்த அபத்தமான ஆபாசத்தை யும் நம்பித்தானகவேண்டும் என்பது ஏற்படும்.

உலகிலுள்ள எல்லாக்குழந்தைகளும் நாஸ்திகர்களே யாவார்கள்; ஏனெனில், கடவுளைப்பற்றி அவர்களுக்கு

ஒன்றுமே தெரியாது. ஆகவே, இதற்காக அவர்களைக் கெட்டவர்களென்றோ, பாவிகளென்றோ சொல்லமுடியுமா? அவர்கள் எந்த வயதில் கடவுளை நம்புவதற்கு ஆரம்பிக்கிறார்கள்? பகுத்தறிவு வந்தவுடன் என்று நீங்கள் சொல்வீர்கள். இப்பகுத்தறிவு காலம் எப்போது ஆரம்பிக்கிறது? அறியமுடியாததென்று சொல்லப்படும் கடவுள் தத்துவத்தை ஆராய்வதில் மிக மேதாவிகளான மதக்காரர்கள் கூட தவித்துக்கொண்டிருக்கும்போது, பெண்கள், தொழிலாளர்கள் முதலிய ஜனத் தொகையின் பெரும்பாலான பாமர மக்கள் என்போர் அதைப்பற்றி என்னதான் தெரிந்துகொள்ளமுடியும்?

## 31. கடவுள் நம்பிக்கை தொட்டிற் பழக்கமே.

———)o(———

கடவுளைப்பற்றி யாருக்கு ஒன்றுமே தெரியாதோ அவர்களுடைய வார்த்தையைக் கேட்டுத்தான் பிறரும் கடவுளை நம்புவதற்கு ஆரம்பிக்கிறார்கள். நமது வளர்ப்புத்தாய்கள் தான் நமது கடவுள் உபாத்தியாயர்கள்; மனிதர்கள் ஓநாய், பிசாசு முதலியவைகளைப் பற்றிக்குழந்தைகளிடம் சொல்வதுபோலவே கடவுளைப்பற்றியும் குழந்தைகளிடம் சொல்லுகிறார்கள். பச்சிளம்பிராயத்திலிருந்தே இயந்திரம் மாதிரி இரண்டு கைகளையும் தாங்களாகவே சேர்க்கும்படி சொல்லிக் கொடுக்கிறார்கள். அப்படிச் சொல்லிக் கொடுக்கும் வளர்ப்புத் தாய்களுக்கே கடவுளைப்பற்றி அக்குழந்தைக்குத் தெரிந்ததைவிட சிறிதாவது விபரமாய்த் தெரியுமா?

## 32. கடவுள் என்பது ஒரு பரம்பரை வழக்கம்.

ஒரு குடும்பத்தின் சொத்தும், அதன் பொருப்பும் எப்படி ஒரு தகப்பனால் தன்னுடைய சந்ததியார்களுக்குக் கொடுக்கப்படுகிறதோ அதைப்போலவேதான் மதம் என்பது கொடுக்கப்படுகிறது. கடவுள் என்பதை ஒருவர் மற்றொருவருக்குச் சொல்லிக் கொடுக்காமலிருந்தால் உலகிலுள்ள பெரும்பாலான மக்களுக்குக் கடவுள் என்றால் என்னவென்பதே தெரியாது. ஒவ்வொருவனும் தனது முன்னோர்களிடமிருந்து எந்தக் கடவுள் என்பதைப்பற்றித் தெரிந்துகொண்டானோ அதையே தான் தனது சந்ததியார்களுக்கும் சொல்லுகிறான். ஆனால் அவனுடைய இஷ்டத்திற்குத் தக்கபடி ஒவ்வொருவனும் அந்தக்கடவுளைத் திருத்தியும், புதுப்பித்தும் அழகு படுத்தியும் சொல்லுகிறான்.

## 33. அதன் ஆரம்பகாலம்.

மனிதனுடைய மூளையானது முக்கியமாய் இளம் பிரயத்தில், ஒரு மிருதுவான மெழுகைப்போல் எந்தவழியிலும் திருப்பக்கூடியதாக இருக்கிறது. தானே யோசிக்கும் தன்மை வரக்கூடாத பருவத்தில் மனிதனுடைய அபிப்பிராயங்களையெல்லாம் உண்டு பண்ணுவது அவனுடைய கல்வியேயாகும். இதை யுணராமல் சிறிய வயதில் சரியாகவோ, தப்பாகவோ நமது மண்டைக்குள் புகுத்தப்பட்ட அபிப்பிராயங்களெல்லாம் நமது பிறப்பிலேயே இயற்கையாக ஏற்படும் உணர்ச்சியென்று தப்பாக

நம்பிக்கொண்டிருக்கிறோம். இந்த மனப்பான்மைதான் நமது பிழைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கிறது.

## 34. அது பரவும் விதம்.

யார் நமக்குப் போதிக்கிறார்களோ அவர்களுடைய அபிப்பிராயங்களே நமக்குள் புகுத்தப்படுகின்றன. நம்மைவிட அவர்களை அதிக புத்திசாலிகள் என்றே நாம் நம்புகிறோம். நமக்குக் கற்பிக்கப்படும் விஷயங்களை அவர்கள் பூரணமாய் அறிந்துகொண்டுவிட்டதாகவே நாம் நினைத்துக்கொள்ளுகிறோம். அதனால் அவர்கள் மீது அதிகமான நம்பிக்கை வைக்கிறோம். நமக்கு நாமே உதவி செய்துகொள்ள முடியாத பக்குவத்தில் அவர்கள் நம்மைப்பற்றிக் கவலையெடுத்து வந்ததனால் பிறகு நம்மை ஏமாற்றமாட்டார்கள் என்றே தீர்மானிக்கிறோம். இந்த எண்ணத்தினால்தான் ஆதாரவில்லாத ஆயிரக்கணக்கான தவறுகளைக் கண்மூடித்தனமாய்க் கையாள ஆரம்பிக்கிறோம். அவர்கள் சொல்வதைப்பற்றி ஆராய்ச்சி செய்யக் கூடாதென்று அவர்கள் சொல்லியிருந்துங்கூட அவர்கள் மீது நமக்கு நம்பிக்கைக் குறைவதில்லை. ஆனால் அதற்கு மாறாக அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு மரியாதை செய்கிறோம்.

## 35 பகுத்தறியமுடியாத காலத்தில் கற்பிக்கப்பட்டவை.

---

மனித சமூகமானது சரி எது, தப்பு எது என்றும், வலதுகை எது, இடதுகை எது என்றும் தெரிந்துகொள்ளமுடியாத ஒருபிராயத்திலேயே மதக்கொள்கைகளைப் பற்றி சொல்லிக் கொடுப்பதில் போதனைக்காரர்கள் சர்வ ஜாக்கிறதையாக இருக்கிறார்கள். 40 வயதான ஒரு மனிதனுடைய குணஇசயங்களைத் திருத்துவதென்பது எவ்வளவு கஷ்டமான காரியமோ, அவ்வளவு கஷ்டந்தான் 40 வயதான மனிதன் தனது சிறு பிராயத்திலிருந்தே கடவுளைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை மாற்றுவதிலும் இருக்கிறது.

## 36 இயற்கை விநோதங்களுக்கும், கடவுளுக்கும் சம்பந்தமில்லை.

---

கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார் என்பதற்கும், அந்த உண்மையை நிரூபிப்பதற்கும் இயற்கை விநோதங்களே அத்தாட்சியாகும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், நான் கேட்பதொன்று. இயற்கையைப்பற்றி நினைக்கவும் அதனுடைய வளர்ச்சியைப் பற்றி ஆலோசிக்கவும் இவ்வுலகில் எத்தனை பேருக்கு அவகாசமும், சாமர்த்தியமும், போதிய பிரியமும் இருக்கிறது என்று கேட்கிறேன்? உலகத்திலுள்ள பெரும்பாலான

மக்களுக்கு இவ்வியற்கையைப் பற்றிய கவலேயே கிடையாது. ஒரு குடியானவன் தான் தினந்தோறும் பார்த்துக்கொண்டிருக்கிற சூரியனுடைய அழகைப் பார்த்து மனங் கசிவதில்லை. ஒரு கப்பலோட்டியானவன் சமுத்திர அலைகளின் அசைவுகளைப்பார்த்து ஆச்சரியப்படுவதில்லை. அவனுக்கு அதிலிருந்து மத சம்பந்தமான தத்துவார்த்தங்கள் தோன்றுவதுமில்லை. இயற்கை விநோதங்களுக்குக் காரணம் கூறமுடியாத ஏதோ சிலருக்கு மாத்திரம் கடவுளின் சத்தி இயற்கை வழியாக அறியக்கூடியதாகத் தோன்றலாமே யொழிய, இயற்கையின் விசேஷங்களைக் கொண்டு கடவுளிருப்பதாக நிரூபித்துவிட முடியாது. நிதானமான மனப்பான்மையை யுடைய ஒரு தத்துவ ஞானிக்கு இயற்கையின் விநோதங்கள் ஒரு நிரந்தரமான சட்டங்களுக்குட்பட்டது என்று தோன்றுமேயொழிய, வேறு எவ்விதத் தத்துவமும் தோன்றாது. இயற்கை என்பது பல வேறான வஸ்துக்கள் பல விதங்களாக ஒன்று சேர்வதின் பயனேயாகும் என்ற உண்மை அவனுக்குப் புலப்படும்.

## 37 & 38. இயற்கை விநோதங்களுக்குக் காரணம் உண்டு.

---

இவ்வியற்கை விநோதங்களிலிருந்து மனிதன் கற்றுக் கொள்ளவேண்டிய அரிய விஷயங்களும், அவைகளைத் தனது சௌகரியத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டிய அவசியங்களும் இருக்க, அவைகளுக்குக் காரணமான ஒன்று, அறியமுடியாத ஒன்று, கற்பனை

யான ஒன்று இருப்பதாக நினைத்துக்கொள்வது எவ்வளவு பொருத்தமற்ற தர்க்கம் என்பதைப் பாருங்கள். நம்மால் அறியக்கூடிய ஒரு விஷயத்திற்கு நம்மால் அறியவே முடியாத ஒன்று கர்த்தா என்று சொல்வதானது எவ்வளவு அபத்தமானது என்பதை யோசித்துப் பாருங்கள். கடவுள் என்றால் என்ன? ஆவி அல்லது ஆத்மா என்றால் என்ன? நமக்கு ஒன்றுமே புலப்படாத நிலைமையைச் சொல்லக்கூடிய வார்த்தைகளாகும். ரிஷிகளே! குருமார்களே! உங்களுக்கொரு வார்த்தை. இயற்கையையும், அதன் காரண காரியங்களையும் பற்றி சிந்தனை செய்யுங்கள். பிறகுதான் அதன் உண்மையை உணர்வீர்கள். அவ்வாறு உணர்ந்துகொண்டபின் இயற்கைக்கு மாறான கட்டுக்கதைகளைப் போன்ற அபிப்பிராயங்களைத் தேடி அலையாதீர்கள். ஏனெனில் அவ்வாறு செய்வதால் உங்களுடைய புத்தி விசாலப்படுவதற்கு மாறாக, உங்களை நீங்களே அறிந்துகொள்ள முடியாமல் உங்களுடைய மூளைகளைச் சிக்கலில் கொண்டுபாய் புகுத்திவிடுகிறீர்கள்.

கடவுள் என்ற ஒன்று இல்லாமல் இயற்கைக் காரணம் கூறமுடியாது என்கிறீர்கள். அதாவது உங்களுக்கு எதைப்பற்றி மிகச் சொற்பமாகத் தெரியுமோ அந்த ஒன்றை விளக்குவதற்காக, உங்களுக்கு ஒன்றுமே தெரியாத ஒன்றை (கடவுளை)க் காரணமாகக் காட்டுகிறீர்கள். எது ஒன்று விளங்காததாக இருக்கிறதோ அதை இன்னும் விளங்காத ஒன்றைக் கொண்டு விளக்கிவிடுவதாகப் பாசாங்கு செய்கிறீர்கள். ஒரு முடிச்சின்மேல் இன்னும் பல முடிச்சுகள் போட்டு அதை அவிழ்த்துவிட்டதாகக்

கருதிக்கொண்டிருக்கிறீர்கள். மிகத் தீவிரமான தத்துவ ஞானிகளே! கடவுளிருப்பதாக நிரூபிக்கவேண்டுமானால் தாவர நூலிலுள்ள விஷயங்களைக் காப்பியடியுங்கள்; மனித உடம்பிலுள்ள ஒவ்வொரு அணுவைப்பற்றியும் சோதனை செய்து அறிந்துகொள்ளுங்கள். ஆகாயத்தில் பறந்துபோய் நட்சத்திரங்களின் சுழல்களைக் கணக்கெடுங்கள், பிறகு கீழே பூமிக்கு வந்து தண்ணீர் ஓடும் முறைகளைக் கவனித்து அறியுங்கள். அதன்பிறகு வண்ணாத்திப் பூச்சிகள், புழுக்கள் நீர் ஜந்துக்கள், அணுக்கள் முதலிய எல்லாவற்றிலுமுங்களுடைய கடவுளரின் பெருமை தெரிவதைப்பற்றி சாங்கோபாங்கமாகப் பிரசங்கிக்கலாம். இவைகளெல்லாம் உங்கள் கடவுள் இருப்பதாக ருசுப்படுத்திவிட முடியாது. ஆனால் இவைகள் எதை ருசுப்படுத்துமென்றால் இயற்கையிலுள்ள அணுக்கள் பலவிதங்களாகச் சேரும் முறை, அதன் காரண காரியங்கள் முதலியவைகளைப் பற்றி உங்களுக்கு ஒரு இழவுமே தெரியாது என்பதைத்தான் ருசுப்படுத்தும். இன்னும் இயற்கையை நீ அலட்சியப்படுத்திவிட்டாய் என்பது விளங்கும். தூரதிருஷ்டிக் கண்ணாடிக்குக்கூட புலப்படாத பல அணுக்களும், ஜந்துக்களும் இருக்கின்றன என்ற ஒரு விஷயமே உனக்குப் புலப்படவில்லை என்பது தானாய் விளங்கும். கடைசியாக, ஸ்பரிசிக்கக்கூடியதும், உணரக்கூடியதுமான பல விஷயங்களை உனது புத்தியானது உணர்ந்துகொள்ள முடியாமல், தெரியாத ஒரு உலகத்தில் உன் அறிவுக்கு எக்காலும் புலனாகாத ஒன்று தலைவனாக இருப்பதாக நீ சொல்லிக்கொள்வதானது, உனக்கு ரொம்ப லகுவாக இருக்கிறது என்கிற குட்டு தான் இதனால் வெளிப்படுகிறது.

## 39 & 40. உலகம் ஒருவராலும் படைக்கப்படவில்லை.

———)o(———

காரணமில்லாமல் காரியமுண்டாகாது என்று மதக்காரர்களெல்லோரும் வெகு சிரத்தையோடு கூறுகிறார்கள். உலகம் தானாகவே உண்டாகவில்லையென்று அடிக்கடி சொல்லுகிறார்கள். ஆனால் நான் சொல்வதென்னவெனில், உலகம் என்பது காரணமேயொழிய காரியமல்ல. இது ஒருவராலும் செய்யப்படவில்லை. ஏனெனில் இதைச் செய்ய எவராலும் முடியாது. உலகம் எப்போதுமே இருந்துகொண்டேதானிருக்கிறது. அது இருக்கவேண்டிய அவசியமும் இருக்கிறது. அதற்குக் காரணம் அதுவேதான். இயற்கையானது நம் கண்ணெதிரில் சதா அசைந்துகொண்டும், உற்பத்தியாகிக் கொண்டும் இருப்பதுமே அதன் தத்துவமாகும். ஆகையால் அதை நடத்துவதற்குக் கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தி வேண்டிய அவசியமே யில்லை. ஜட பதார்த்தமானது தன்னுடைய சக்தியைக் கொண்டும், வேறுபாட்டின் காரணத்தினாலும் அசைகிறது. அதனுடைய பல விதமான அசைவுகளுக்குக் காரணம் அதனிடமிருக்கும் பலவிதமான சத்துக்களேயாகும். ஒவ்வொரு ஜீவனைப் பற்றியும் நமக்கிருக்கும் வித்தியாசமான உணர்ச்சியாலும் அதனதனுடைய வித்தியாசமான அசைவுகளாலுமே நாம் ஒரு ஜீவனுக்கும், மற்றொன்றுக்கும் இருக்கும் வித்தியாசத்தை உணர்கிறோம்.

இயற்கையிலுள்ள ஒவ்வொன்றும் சதா அசைந்துகொண்டே இருப்பதை நீ உன் முன் பார்க்கிறாய்; ஆனால்

இயற்கைக்கு சுய உணர்ச்சியில்லையென்று பாசாங்கு செய்கிறாய்! பிறகு இயற்கையை நடத்துவதற்குப் பிரத்தியேகமான சக்தி வேண்டுமென்றும் நம்புகிறாய்! ரொம்ப சரி! இந்தப் பிரத்தியேக சக்தியென்பது யார்? அது தான் ஒரு ஆத்மா; அதாவது, ஒன்றுமே விளங்காத முரண்பட்ட அபிப்பிராயங்களைக் கொண்ட ஒரு ஜீவன். ஆகவே, நான் சொல்வதென்னவெனில் ஜடபதார்த்தம் என்பது தானே அசைகிறது. ஆகையால் அதை அசைப்பதற்கு ஒரு பிரத்தியேகமான சக்தி அவசியமே இல்லை என்பதே நியாயமாகும். உன் மனது கண்ட இடங்களிலெல்லாம் சுற்றித்திரிவதைத் திருப்பிக்கொண்டுவா. கற்பனையான உலகத்திலிருந்து உண்மையான உலகத்திற்கு வா காரண காரியங்களை அறிந்துகொள். "முழுமுதற் காரணம்" என்று சொல்வதை மதக்காரர்களுக்கே விட்டுவிடு.

## 41. இன்னும் சில ருசுக்கள்.

பலவிதமான வஸ்துக்களிலிருந்து பல்வேறு விதமான உணர்ச்சிகளையும், அபிப்பிராயங்களையும் நாம் பெறுவதால் தான் நாம் அவைகளைப் பற்றி உணர்கிறோம் அவைகளில் ஒன்றுக்கொன்று உள்ளபேதங்களை அறிகிறோம்; அது அதற்குள்ள விசேஷங்களைக் கண்டுகொள்ளுகிறோம். இன்னும் ஒரு வஸ்துவை பார்க்கவோ, உணரவோ வேண்டுமானால், அவ்வஸ்துவுக்கும், நமது அங்கங்களுக்கும் சம்பந்தமிருக்கவேண்டும்; நமக்குள் உணர்ச்சியை உண்டாக்காமல் ஒரு வஸ்துவுக்கும், நமக்கும் சம்பந்தமிருக்கமுடியாது; அந்த வஸ்துவிற்கு ஒரு சுய அசை

வுணர்ச்சியில்லாமல் நம்மிடம் உணர்ச்சியை உண்டாக்க முடியாது. உதாரணமாக நாமொரு வஸ்துவைப் பார்த்தவுடன் நமது கண்களுக்கும், அதற்கும் சம்பந்தமேற்படுகிறது. என்னுடைய கண்ணின் பார்வையில் படும்படியான ஒரு வஸ்து அசைந்தாலொழிய, வெளிச்சமோ அல்லது தோற்றமோ என்னவென்பதை நான் அறியமுடியாது. நான் ஒரு வஸ்துவை முகர்ந்ததும் அவ்வுணர்ச்சியைக் கிரகிக்கக்கூடிய நரம்புக்கும், அவ்வஸ்துவின் வாசனைக்கும் ஏதேனும் சம்பந்தமிருந்தாலொழிய நான் அவ்வஸ்து என்னவென்பதை அறியமுடியாது. நான் ஒரு சப்தத்தைக் கேட்பதென்றால், எனது காதுக்குள்ளிருக்கும் "ஜவ்வு"க்கும் காற்றுவழியே தானாகவே அசைந்துவரும் சப்தத்திற்கும் ஏதேனும் சம்பந்தமிருந்தாலொழிய சப்த உணர்ச்சியென்பதை நான் எவ்வாறு அறியமுடியும்?

ஆகவே இவைகளிருந்து விளங்குவதென்னவென்றால், இயற்கையின் அசைவு என்ற ஒன்று இல்லாதிருக்குமானால், நாம் உணரவும் முடியாது; பார்க்கவும் முடியாது; கேட்கவுமுடியாது; முகரவும் முடியாது; ஒரு வஸ்துவை இன்னதென்று பகுத்தறியவே முடியாது என்பது சுருக்கமாக இதிலிருந்து ஏற்படுகிறதல்லவா? "ஒரு ஜீவனுடைய சத்திலிருந்து தான் பல ஜீவன்கள் உற்பத்தியாகின்றன" வென்று பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படுகின்றன. இது உண்மையானால், வஸ்துக்களின் குணங்கள் முதலியவைகளைப்பற்றி நாம் அறிந்திருப்பதற்கெல்லாம் அவைகளினுடைய இயற்கை அசைவே காரணம் என்று ஏற்படுகிறதல்லவா? என்னுடைய அசைவு

Q6- N35



களைப்பற்றி நானே அறிந்தாலொழிய, நான் உயிரோடிருக்கிறேன் என்று எப்படி நான் நம்பமுடியும்?

எனவே 'அசைவு' என்பது உலகிலுள்ள சகல வஸ்துக்களுக்கும் இயற்கையாகவே உள்ள ஒரு குணமாகும் என்று ருசுவாகிறது. இதைவிட்டு வஸ்துக்களுக்கு இயற்கையான உணர்ச்சி கிடையாதென்று கூறித் திரிபவர்கள், அவ்வஸ்துக்கள் ஒன்றோடொன்று சம்மந்தம் படுங் காலத்தில் ஏற்படும் மாறுபாடுகளைக்கொண்டாவது அவர்கள் நினைத்திருப்பது தவறு என்று உணரவேண்டும். தீப்பாஷாணமானது (Phosphorus) ஒரு கண்ணாடிப் புட்டியில் அடைத்து வைத்திருக்கும்போதோ, அல்லது காற்று சம்மந்தமில்லாமல் வைக்கப்பட்டிருக்கும்போதோ எரிகிறதில்லை. ஆனால் காற்றோடு சம்மந்தப்பட்டமாத்திரத்தில் தீப்பிடித்து எரிகிறது. மாவும் தண்ணீரும் சேர்க்கப்பட்டவுடன் பொங்குகிறது. ஆகவே "உயிரற்ற" வஸ்துக்கள் கூட ஒன்றையொன்று பற்றியதும் அசைவுகளைக் கொடுக்கின்றன அல்லவா?

இத்தியாதி காரணங்களால் ஜடபதார்த்தத்திற்குக் கூட அசையும் சக்தியிருக்கிறதென் [illegible] கிறது. ஆகவே இயற்கையை அசைப்பதற்கு [illegible] யான சக்தி (கடவுள்) அவசியமேயில்லை என்பது [illegible] அறிவுடையவர்களுக்கு விளங்காமலே போகாது.

77804

## 42. மனிதன் இருப்பதைக் கொண்டு கடவுளை ருசுப்படுத்த முடியாது.

---

மனிதன் எங்கிருந்து வருகிறான்? அவனுடைய ஆரம்பம் என்ன? அணுக்களின் சேர்க்கையால் உண்டானவனா மனிதன்? முதல் மனிதன் பூமியின் மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டவனா? இதெல்லாம் எனக்குத் தெரியாது. இயற்கை எல்லாவற்றையும் உண்டாக்கியது போலவே மனிதனையும் உண்டாக்கியிருக்கிறதென்பதே எனது அபிப்பிராயம். முதல் கற்கள் எங்கிருந்து வந்தன, முதல் மரங்கள் எங்கிருந்து வந்தன, முதல் யானைகள் எங்கிருந்து வந்தன, முதல் எறும்புகள் எங்கிருந்து வந்தன, என்பவைகளுக்கு நான் என்ன பதில் சொல்வேனோ அதே பதிலைத் தான் முதல் மனிதன் எப்படி வந்தான் என்பதற்கும் சொல்லமுடியும். மிகவும் ஆச்சரியப்படக்கூடியதாக இருக்கும் மனித இயந்திரத்தை உண்டாக்கிய ஒரு அபார சக்தியையுடைய தொழிலாளி (கடவுள்) யைப்பற்றி நினைக்காமலிருக்க முடியுமா என்று சொல்லுகிறார்கள். மனித இயந்திரமானது மிகவும் ஆச்சரியப்படக்கூடியதுதான் என்பதை நான் மறுக்கவில்லை ஆனால், மனிதனும் இயற்கைப் பொருள்களில் ஒன்றாயிருக்கும்போது மனிதன் மாத்திரம் இயற்கையல்லாத ஒன்றினால் உண்டாக்கப்பட்டிருக்கிறான் என்பது கொஞ்சமும் பொருந்தாது. இன்றும் கண்ணில்லாத, காலில்லாத, கையில்லாத, தலையில்லாத, சுவாசப்பையில்லாத, வாயில்லாத, மூச்சுப்பேச்சேயில்லாத ஒரு சக்தி (ஆத்மா) யானது, அதாவது, கடவுள், சிறிது மண்ணை

எடுத்து அதன்மேல் வாயால் ஊதி மனிதனை உண்டாக்கினர் என்று சொல்லுவது இன்னும் எவ்வளவு அபத்தமாயிருக்கிறதென்பதை யோசித்துப்பாருங்கள். "பரக்வே" என்ற இடத்திலுள்ள காட்டுமிராண்டி ஜனங்கள், தாங்கள் சந்திரனிலிருந்து வந்ததாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்; பாவம், அறிவில்லாத பாமரர்கள் என்று நாம் சொல்லுகிறோம். இதே மாதிரிதான் ஐரோப்பாவிலுள்ள மதக்காரர்களெல்லாம் தாங்கள் ஒரு பரிசுத்த ஆத்மாவிலிருந்து உண்டானதாகச் சொல்லுகிறார்கள். முன்னே சொன்ன ஜனங்களுக்கும், இவர்களுக்கும் அறிவு சம்மந்தப்பட்டமட்டில் என்ன வித்தியாசமிருக்கிறது? வாசகர்களே சொல்லட்டும்.

இன்னும் சொல்லுகிறார்கள். "மனிதன் அறிவுடையவனாகையால், அறிவே இல்லாத இயற்கையால் அவன் உண்டாயிருக்கமுடியாது; அறிவுடைய ஒன்றேதான் மனிதனை உண்டாக்கியிருக்கவேண்டும்," என்று முடிவு செய்கிறார்கள். மனிதன் அறிவுடையவன் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். அவன் அவசியத்தையொட்டியே இத்தகைய சக்தியைப் பெறுகிறான். என்பதையும், மற்றொரு மனிதனோடு சேர்ந்து பழகுவதன் நிமித்தம் இந்த சக்தியை விருத்தி செய்துகொள்ளுகிறான் என்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அறிவோடுகூடிய மனித இயந்திரத்தை உண்டாக்கியதாகச் சொல்லப்படும் ஒரு அறிவு சொரூபமான வேலைக்காரனின் சாமர்த்தியமெல்லாம் மனிதனிடத்தில் குறிப்பாகக் காணமுடியவில்லையே என்பதுதான் எனது கேள்வியாகும். எப்படியெனில், மகா அறிவுடையவனால் உண்டாக்கப்பட்ட இந்த அபூர்வ மனித இயந்திர

மானது கெட்டுப்போய்விடுறது; அதே நிமிஷத்தில் இந்த அபூர்வ அறிவானது கலகலத்துப்போய்விடுகிறது; சில சமயங்களில் அடியோடு மறைந்தும் போகிறது. இதிலிருந்து என்ன ஏற்படுகிறது? மனிதனுடைய அறிவானது தேக அவயவங்களின் சம்மந்தா சம்மந்தங்களைப் பொருத்திருக்கிறது. மனிதன் அறிவுடைய ஜீவனாயிருப்பதைக் கொண்டு, அறிவுடைய ஒன்றினால் தான் அவன் படைக்கப்பட்டிருக்கவேண்டுமென்பது பெருந் தவருகும். ஏனெனில், மனிதன் உலகபோகங்களில் ஈடுபட்டவன் என்பதால், அவனைப்படைத்ததாகச் சொல்லப்படும் கடவுளும் உலக போகங்களில் ஈடுபட்டவன் என்று சொல்லமுடியுமா? மனிதன் துரோக புத்தியுடையவன் என்பதால், அவனைப் படைத்தாகச் சொல்லப்படும் கடவுளும் துரோக புத்தியுடையவன் என்று சொல்லமுடியுமா? மதக்கருத்துக்களை எந்தவிதமாக எடுத்துப் பார்த்தாலும் சரி, கடவுள் என்பது முன்னுக்குப் பின் முரணான விஷயங்களைக் கொண்டது என்பதும் கடவுளுடைய சிருஷ்டி என்று சொல்லப்படுவதைக் கொண்டு கடவுள் என்ற ஒன்று இருப்பதாக நிரூபிக்க முடியாது என்பதும் ஏற்பட்டுவிடுகிறது. எப்படியென்ருல், நன்மையே உருவானதும், குறைவே இல்லாததும், அறிவே சொரூபமானதுமான ஒன்ருல் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிகள் முழுதும் கெடுதியும், குறைவும், துன்பமும், அறிவீனமுமெ நிறைந்திருக்கக் காண்கிறோம். இதை எவருவது மறுக்கமுடியுமா?

## 43. மனிதனும், உலகமும்.

———)o(———

இப்போது இன்னென்று சொல்வீர்கள் அதாவது மனிதன், உலகம், அதிலுள்ள சகல வஸ்துக்களாகிய எல்லாம் ஏதோ சந்தர்ப்பத்தினல் உண்டாயிருக்கவேண்டு மென்று சொல்வீர்கள். அதுதான் இல்லை. உலகம் காரியமல்ல சகல காரியங்களுக்கும் அதுவே காரணமாகும். உலகத்திலுள்ள சகல ஜந்துக்களும் உலகத்தால் ஏற்பட்ட பலன்களாகும். ஆனல் உலகம் இம்மாதிரியான காரியங்களைச் செய்வது சில சமயம் நமது கண்களுக்குப் புலப்படுகின்றன. சில சமயங்களில் புலப்படுவதில்லை. உண்மைக் காரியங்களைக் கண்டறியமுடியாதவர்கள் தங்கள் அறியாமையை மறைத்துக்கொள்வதற்காக 'சந்தர்ப்பம்' என்ற பதத்தை உபயோகப்படுத்தலாம். ஆனல் நாம் அவைகளை எவ்வளவு அலட்சியப் படுத்தினலும் இந்தக் காரியங்களெல்லாம் சட்டங்களின்படிதான் நடக்கின்றன. காரணமில்லாமல் ஒரு காரியம் உண்டாகாது.

நாம் பார்க்கின்ற பலகோடி ஜந்துக்களுக்கும், பல்வேருன வஸ்துக்களுக்கும், பலவிதமான சேர்க்கைகளுக்கும், எல்லா அசைவுகளுக்கும் 'இயற்கை' என்ற பெயரை உபயோகப்படுத்துகிறேம். எல்லா வஸ்துக்களும் அவைகள் அமைப்போடு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, சில காரணங்களினல் ஏற்பட்ட காரியங்களேயாகும். அவைகளின் பலன்களையும் நம் கண்ணல் பார்க்கிறேம். இயற்கையிலுள்ள எதுவும் சந்தர்ப்பத்தினல் உண்டாகமுடியாது. எல்லாவற்றிற்கும் குறிப்பான

சட்டதிட்டங்கள் உண்டு, காரண காரியங்கள் சேர்வதால் இந்த சட்டதிட்டங்கள் ஏற்படுகின்றன. ஜடபதார்த்தத்தின் ஒரு அணுவானது மற்றொரு அணுவோடு சந்தர்ப்பத்தினால் சேருவதில்லை. இந்த சேர்க்கையானது சில சாஸ்வதமான சட்டங்களையொட்டி நடைபெறுகிறது. இந்தச் சட்டங்களின்படி ஒவ்வொரு ஜீவனும் அசைகிறது. இன்னின்ன சந்தர்ப்பத்தில் இன்னின்ன மாதிரி அசைவேண்டுமென்று சட்டதிட்டங்களின்படி அவைகள் அசைந்தே தீரவேண்டும். அணுக்கள் ஏதோ தற்செயலாக ஒன்றோடொன்று சேர்கிறது என்று சொல்வதும் இயற்கையின் காரியங்களெல்லாம் ஏதோ திடும் பிரவேசமான சந்தர்ப்பங்களினால் நடைபெறுகின்றனவென்பதும் அர்த்தமில்லாத விஷயங்கள் என்பதோடு வஸ்துக்கள் அசையவும், சந்திக்கவும், சேரவும் பிரியவும் காரணமாயுள்ள சட்டங்களையே புறக்கணிப்பதுமாகும்.

இயற்கையை அறிய சக்தியில்லாதவர்களுக்கும், ஜீவன்களின் சத்துப் பொருள்களை அறியமுடியாதவர்களுக்கும் காரண காரியங்களைப் பகுத்தறியக் கூடாதவர்களுக்கும் உலகிலுள்ள ஒவ்வொன்றும் 'சந்தர்ப்பத்தினால்' உண்டானதாகத் தோன்றலாம். கிரஹங்களின் அமைப்பில் சூரியன் நடுமத்தியில் இருப்பதானது ஏதோ சந்தர்ப்பத்தினால் ஏற்பட்டதல்ல. அது எந்தெந்த வஸ்துக்களினால் சேர்க்கப்பட்டிருக்கிறதோ அந்தந்த வஸ்துக்களின் குணங்களையொட்டி சூரியன் அதற்குரிய இடத்திலிருக்கிறது. இது சூரியனுடைய இயற்கையாகும்.

## 44. உலக அமைப்பைக் கொண்டு கடவுளை நிரூபிக்கமுடியாது ?

இவ்வுலக அமைப்பைக் கொண்டே, இதை ஆளும் ஒரு அறிவுடைய ஜீவன் இருந்துதானாகவேண்டுமென்று மறுக்கமுடியாமல் நிரூபித்துவிடலாம் என்று கடவுளை வணங்குகிறவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த உலக அமைப்பிற்குக் காரணம் அவசியமான சில அசைவுகளேயாகும் என்பதையும் அவ்வசைவுகள் சில சமயங்களில் நமக்கு சாதகமாகவும், சில சமயங்களில் பாதகமாகவும் இருக்கின்றனவென்பதையும் இவர்கள் உணர்கிறதில்லை. நமக்கு சாதகமாயிருக்கும் நிகழ்ச்சிகளை நாம் ஆதரிக்கிறோம்; பாதகமாயிருப்பவைகளை வெறுக்கிறோம்.

ஆனால் இயற்கை எப்போதும் தன் வழியே போய்க்கொண்டுதானிருக்கிறது. அதாவது இன்னின்ன காரணங்களுக்கு இன்னின்ன காரியங்கள்தான் நிகழுமென்ற இயற்கை விதிகளை அநுசரித்தபடியே தான் இருக்கிறது. அவ்விதிகளினின்றும் மாறுபட்டு வேறுவிதமான காரியங்கள் நிகழுவதேகிடையாது. ஆனால் நமக்குத் தெரிந்த காரியங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தால் நாம் சர்வ சாதாரணமாய் இருந்து விடுகிறோம். ஆனால் நமக்கு ஏற்கனவே தெரியாத எதேனும் புதிதான காரண காரியங்கள் நிகழுமாகில் அவைகளை உடனே "அற்புதங்கள்" என்று சொல்லிவிடுகிறோம். ஆனால் எல்லாம் இயற்கையாகவே தான் நடைபெறுகின்றனவென்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்த "அற்புதங்களை" கண்டதும், நமக்கு அவைகளின்

காரணங்கள் புலப்படாததினால், அவைகளைவிட இன்னும் குறைவாகத் தெரிந்த (ஒன்றுமே தெரியாத) ஒரு காரணத்தை (கடவுளை)க் கற்பித்துவிடுகிறோம். உலகமானது என்றும் கட்டுப்பட்டு ஒரு ஒழுங்கின்பேரில்தான் நடைபெற்று வருகிறது. ஒழுங்குமீறி என்றும் நடப்பதேயில்லை. ஆனால், ஒழுங்கு குலைகிறது. என்று சொல்வோமேயானால், நம்முடைய அமைப்பிலேயே ஏதோ பிழையிருப்பதாகத் தான் அதற்கு அர்த்தம். உலகிலுள்ள ஒவ்வொரு ஜீவனும், ஒவ்வொரு வஸ்துவும், ஒவ்வொரு அணுவும், நாம் ஆதரித்தாலும் சரி, ஆதரிக்காவிட்டாலும் சரி, ஒரே சட்டத்தின் கீழ் கட்டுப்பட்டுத்தான் நடைபெறுகின்றன. கனமான வஸ்துக்கள் விழுவதும், ஆறுகள் ஓடுவதும், சமுத்திரத்தின் அலைகள் அசைவதும், காற்று அடிப்பதும், மழை பெய்வதும் கடவுள் கிருபையால் நடைபெறுகின்றனவென்று சொல்வதோடு, அவருடைய அநுகிரகத்திற்காக அவரைப் புகழவும் செய்கிறோம். ஆனால் உண்மை என்னவென்றால், பூகம்பங்கள், எரிமலைகள், வெள்ளப் பெருக்குகள், தொத்து நோய்கள், பஞ்சங்கள் இவைகளுக்கெல்லாம் எந்த இயற்கையானது காரணமாகயிருக்கிறதோ, அதே இயற்கைதான் மேற்கூறியசம்பவங்களுக்கும் காரணமாக இருக்கிறது.

உலகத்திற்கு ஒரு இயற்கை அமைப்பு காரணமாயிருக்கிறதென்பதைக் கேட்க ஆச்சரியப்படுவது எப்படி இருக்கிறதென்றால், உலகத்தில் இன்ன காரணங்களால் இன்ன காரியங்கள்தான் நிகழும் என்ற விதிகளைக்கண்டு ஆச்சரியப்படுவது போலவேயாகும். ஒழுங்கிற்கு விரோ

தமான நிகழ்ச்சிகளைக் கண்டு பயப்படுவதானது, காரண காரியங்கள் வேறு படுவதினால் ஏற்படும் மாறுபாடுகளை மறந்ததாகவே யாகும். இயற்கையின் ஒழுங்கைக் கண்டு ஆச்சரியப்படுவதானது, உலகத்திலுள்ள ஒவ்வொன்றை யும் கண்டு ஆச்சரியப்படுவதாகவேயாகும். அதாவது, தன்னைத்தானே கண்டு ஆச்சரியப்படுவதை யொக்கும். ஒரு ஜீவனுக்கு ஒழுங்காக இருப்பது மற்றொரு ஜீவ னுக்கு ஒழுங்கற்றதாகத்தானிருக்கும். கொடூரமான ஜீவன்களெல்லாம், தங்களிஷ்டப்படி நடக்க முடியாத வைகளையெல்லாம் ஒழுங்குமீறி இருப்பதாகத்தான் கருது கின்றன. தங்களுடைய கொடுமையைச் செலுத்துவதற் குத் தடைகள் ஏற்படும்போதெல்லாம் உலகிலுள்ள ஒவ் வொன்றும் ஒழுங்குமீறி இருப்பதாகவேதான் அவைகள் நினைக்கின்றன.

அதெல்லாம் போகட்டும். கடவுளே இயற்கைக்குக் காரண கர்த்தாவாகவும், இயற்கையை நடத்தும் சக்தி யாகவும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்படியா னால், உலகிலுள்ள ஒவ்வொரு ஒழுங்கினத்திற்கும் அவ ரேதான் காரணமாகவேண்டும். அவர் எந்தெந்த வஸ் துக்களுக்கு எந்தெந்த சக்திகளைக் கொடுத்திருக்கிறாரோ அந்தந்த வஸ்துக்கள் அந்தந்தச் செயல்களைச் செய்து தான் தீரவேண்டும். கடவுள் சாதாரண நடைமுறை விஷ யங்களை மாற்றுவதென்றால் அவருடைய மாறாத்தன் மைக்குப்பங்கம்ஏற்படுகிறது. அவருடைய உலகில் ஒழுங் கே நிலவுவதாகவும், அதிலிருந்தே அவர் இருப்பதுருசு வாகிறதென்றும், அவருடையஅறிவு, சக்தி, நற்குணம்

முதலியவைகளுக்கும் அதுவே அத்தாட்சி யென்றும் சொல்கிருர்கள். இது உண்மையானுல், இவ்வுலகின்ஒழுங் கில் உள்ள முரண்பாடுகளுக்கும் அவரே கர்த்தாவென்று ஏற்படுகிறது. அப்போது அவர் இருப்பதே தகராருகி விடுகிறது. அல்லது, அவருக்கு திடபுத்திகிடையாது என்று எற்படுகிறது. அல்லது சக்தியில்லை யென்று ஏற்படுகிறது. அல்லது முன் யோசனையில்லை யென்று ஏற்படுகிறது. அல்லது முன் ஜாக்கிரதையில்லை யென்று ஏற்படுகிறது. ஆகையால் அவர்உபயோகப்படுத்த வேண் டிய சாதனங்களிலும் ஆயுதங்களிலும் அவர் பெரும் பிழை செய்து விட்டார் என்று அவர் மேல் நாம் நியாய மாகக்குற்றம் சாட்டலாம். கடைசியாக இயற்கையின் ஒழுங்கானது கடவுளின் சக்தியையும் அறிவையும் நிருபி க்கிறதென்று சொன்னல் அதிலுள்ளஒழுங்கீனங்கள் அவ ருடைய பலஹீனத்தையும், அறிவற்ற தன்மையையும், திடமில்லாக் குணத்தையுமே நிருபிக்கும்.

கடவுள் எங்கும் இருக்கிருர் என்று சொல்லுகிறீர் கள்; அவர் எல்லா இடத்தையும் நிரப்பிக்கொண்டிருக்கி ருர் என்கிறீர்கள்; அவனன்றி ஒ ர ணு வு ம் அசையாது என்கிறீர்கள்; அவரே எல்லாவற்றிற்கும் கர்த்தா என்கி றீர்கள்; இதெல்லாம் சரியென்றே ஒப்புக்கொண்டால், உலகிலுள்ள ஒழுங்கீனங்களுக்கும் கஷ்டங்களுக்கும் உங் கள் கடவுளே பொறுப்பாளியாவார் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். இயற்கையைச் சின்னபின்ன ப்படுத்துகிறவரும் உங்களுடைய கடவுளேயாகும்; குழப் பங்களுக்கெல்லாம் அவரே காரணமாயிருக்கிறார். மனி தனிலும் அவரே இருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்ள

வேண்டும். அப்படியானால் மனிதன் பாவம் செய்யும் போதும் அவரே அவனை ஆட்டுகிறார் என்பதையும் ஒப் புக்கொள்ளவேண்டும். கடவுள் எங்கும் இருப்பவராயி ருந்தால் அவர் என்னிடத்திலும் இருக்கிறார்; என்னோடு அவரும் அசைகிறார். நான் ஏமாற்றப்படும்போது அவ ரும் ஏமாற்றப்படுகிறார்; கடவுள் இருப்பதை நான் ஆட் சேபிக்கும் போது அவரும் சேர்ந்து ஆட்சேபிக்கிறார். கடவுளை நான் கோபப்படுத்தும் போது அவரும் சேர்ந்து கோபப்படுத்துகிறார்.

ஓ! மதாபிமானிகளே! ஆஸ்திகர்களே! கடவுளைப் பற்றி பேசும்போது, நீங்கள் சொல்வது இன்னது என் பது உங்களுக்கே தெரியவில்லை யென்பதை ஞாபகப்படுத் துகிறேன்.

## 46. "கடவுளு"க்கும், அறிவுக்கும் சம்பந்தமுண்டா?

நாம் ஒன்றை அறிவுடையது என்று சொல்ல வே ண்டுமானால் அதற்கு எண்ணங்கள் அபிப்பிராயங்கள் சக்தி முதலியவை வேண்டும். எண்ணங்கள் அபிப்பிரா யங்கள் சக்தி இவைகள் இருக்க வேண்டுமானால் அதற்கு உறுப்புக்கள் இருக்க வேண்டும். உறுப்புக்கள் இருக்க வேண்டுமானால் உடல் இருக்கவேண்டும். வேறு உடல்கள் மேல் சக்தியைச் செலுத்த வேண்டுமானால் அதற்கும் ஒரு உடல் இருக்க வேண்டும், பிறருடைய கஷ்டங்களை அறிய வேண்டுமானால், அதுவும் கஷ்டம் என்றால் என்ன வென்பதை அனுபவித்திருக்க வேண்டும். ஆகவே இவை

களிலிருந்து விளங்குவது என்னவென்றால் ஒரு பரிசுத்த ஆத்மாவானது அறிவுள்ளதாய் இருக்க முடியாது என்பதே. ஆகவே உலகத்தில் நடைபெறும் காரியங்களுக்கும், அதற்கும் எவ்வித சம்மந்தமும் இருக்க முடியாது. ஆனால் கடவுளினுடைய அறிவு, கடவுளினுடைய கருத்துக்கள், கடவுளுடைய அபிப்பிராயங்கள் முதலியவைகள் கேவலம் மனிதனுடைய அறிவு, கருத்து முதலியவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கவே முடியாது என்று சொல்வீர்கள். அப்படியானால் ரொம்ப நல்லது! மனிதனுக்குச் சம்மந்தமில்லாத ஒன்றின் அறிவு, கருத்து முதலியவைகளைப்பற்றி, அவைகள் நல்லதா கெட்டதா என்பதை அறிவைக்கொண்டு யோசிக்கவும் அதன் பேரறிவை உணரவும் மனிதனால் எப்படி முடியும்? என்று கேட்கிறேன். அப்படிச் செய்வதுபோல் பாவிப்பதானது நமக்கு ஒன்றுமே தெரியாத ஒன்றைப்பற்றி புகழ்ந்து, வணங்கி, துதித்துக்கொண்டிருப்பது எவ்வளவு அறிவீனமான செய்கை என்பதை நிதானமாய் யோசித்துப்பாருங்கள். கடவுளின் பேரறிவை வியந்து கொள்வதில் சற்றேனும் அர்த்தமிருக்கிறதா என்பதையும் யோசித்துப் பாருங்கள். நம்மால் நிர்ணயிக்க முடியாத ஒன்றைப்பற்றித் துதிப்பது அறிவுடமையாகுமா என்பதையும் சிந்தியுங்கள். ஏன் பாராட்டுகிறோம் என்ற காரணத்தையறியாமல் ஒன்றைப் பாராட்டிக் கொண்டேயிருப்பது புத்திசாலித்தனமாகுமா' புகழ்ச்சி என்பது அறிவீனத்திலிருந்து பிறப்பதாகும். தங்களுக்கு எது ஒன்று விளங்கவில்லையோ அதைத்தான் மக்கள் புகழ்கிறார்கள். அதைத்தான் வணங்குகிறார்கள்.

---

## 47, 48. மதத்திற்கும், கடவுளுக்கும் சம்பந்தமேயில்லை.

மனிதர்களோடு எவ்வித சம்பந்தமும் இல்லாததாக வர்ணிக்கப்படும் கடவுளுக்கு மேற்கண்ட அறிவு, கருத்து, அபிப்பிராயம் முதலிய மனித குணங்களைக் கற்பிப்பதிலிருந்து அந்தக் கடவுள் மனிதனுடைய சிருஷ்டியா அல்லவா என்பது தானகவே விளங்கும். கடவுளுக்கு மனிதனுடைய குணங்களை ஏற்றியதால்தான் கடவுளுக்கும் மனிதனுக்கும் சம்பந்தம் இருப்பதுபோல் தோற்றுகிறது. எல்லையற்றது என்று சொல்லப்படும் ஒன்றின்மேல் இக்குணங்களை ஏற்றிவிட்டு, பிறகு மனிதர்கள் தங்களைத் தாங்களே அறிய சக்தியற்றவர்களாய் விடுகிறார்கள். இந்தக் "கடவுள்-மனித" சுதம்பந்தினால் ஏற்பட்ட பலன் யாது? ஒன்றும் விளங்காத பூஜ்யமும் மனித அறிவின் சூன்யமுமேதான் பலன்.

டான்டி (Dante) என்ற புலவர் தன்னால் எழுதப்பட்ட "சுவர்க்கம்" என்ற செய்யுளில் கடவுளானவர் தன்னெதிரில் மூன்று வட்டங்களுக்கு அடியில் தோன்றியதாகவும், அப்போது பல அழகான வர்ணங்கள் தோன்றியதாகவும் எழுதியிருக்கிறார். ஆனால் அந்தத் தோற்றத்தின் ஜ்வலிப்பை ஞாபகம் வைத்துக்கொள்வதற்காகத் தன்னுடைய முகத்தையே பார்த்துக்கொண்டாராம். ஆகவே, கடவுளை வணங்குவதன் வழியாக மனிதன் தன்னையே வணங்கிக் கொள்கிறான்.

நாம் சிறிது நேரம் யோசித்துப் பார்த்தாலுங்கூட, மனித குணங்கள், கருத்துக்கள், அபிப்பிராயங்கள் முத

லியவைகளில் ஒன்றுகூட கடவுளுக்கு இருக்க முடியாது என்பது தெளிவாக விளங்கிவிடும். நம்முடைய மனோ நிலையைப் பொறுத்தே நமது குணங்களும் கருத்துக் களும் அடிக்கடி மாறுபடுகின்றன. அப்படியிருக்க நம் மைப்போல் கடவுளுக்கும் மனோ நிலை என்பது உண்டா? என்பது யோசிக்கக்கூடியதாகும். நாம் எந்த மனிதர் களோடு பழகுகிறோமோ அந்தக்குணங்கள்தான் நமக்கும் ஏற்படுகின்றன. ஆனால் கடவுளோ, நீங்கள் சொல்லு கிறபடி தன்னந்தனியே,—ஏகாந்தமாய் இருக்கின்றவர். கடவுளுக்கோ, அவரைப்போல மற்றொருவர் கிடையாது. அவருக்கு ஒரு சமூகத்தில் வசிக்க சந்தர்ப்பமும் கிடை யாது. அவருக்கு அந்தத் தேவையும் இல்லை. அவரோ, ஒன்றாலும் அழிக்கமுடியாத சந்தோஷத்தில் வாழ்கிறார். ஆகையால், இப்போதாவது ஒப்புக்கொள்ளுகிறீர்களா? எதை?—உங்களுடைய கொள்கையின்படியே, நல்ல குணங்கள் என்று நாம் சொல்லுகின்றவை அவரிடம் கிடையாது; மனிதனும் அவரிடம் நல்லவனாக நடந்து கொள்ள முடியாது என்பதை இப்போதாவது ஒத்துக் கொள்ளுகிறீர்களா?

## 49. சிருஷ்டியின் முடிவுதான் மனிதன் என்பது பெரிய அபத்தம்.

மனிதனானவன், தன்னுடைய குணங்களிலேயே மயங்கியவனாய் தன்னைப்போலவே இருக்கும் ஒரு ஜீவ னைப் படைப்பதே உலகின் முடிவாகக் கடவுள் ஏற்படுத்தி இருக்கிறார் என்று உத்தேசம் செய்துகொள்ளுகிறான்.

இப்படி நினைப்பதற்குக் காரணம் என்ன? கடவுளை நினைப்பதற்கும் அவரை, வணங்குவதற்கும் வேண்டிய அறிவை கடவுள் எல்லா ஜீவன்களிலும் மனிதன் ஒரு வனுக்கே கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதாவது, கடவுள் இவ்வுலகத்தைப் படைத்திருப்பதானது தன்னுடைய பெருமைக்காகவே என்றும், அவருடைய சிருஷ்டியில் மனிதனைச் சேர்த்ததற்குக் காரணம், தன்னுடைய வேலைகளைப் புகழ்வதற்கும், தன்னைத் துதிப்பதற்குமே யாகுமென்பதிலிருந்து ருசுவாகிறதல்லவா? இந்தவிதமான எண்ணங்களையுடையவர்தானா உங்கள் கடவுள் என்று கேட்கிறேன். நிதானமாக யோசித்துப் பாருங்கள்.

1. நீங்கள் கடவுளைப்பற்றிச்சொல்லுவதையே எடுத்துக் கொண்டால், மனிதனால் கடவுளை அறிய எக்காலமும் முடியவே முடியாது. கடவுளின் சக்தியைப் பற்றியும் மனிதன் துளிகூட உணர்ந்துகொள்ளவே முடியாது.

2. தனக்கு நிகர் என்பதே இல்லாத ஒன்று (கடவுள்) புகழுக்காக ஆசைப்படுகிறதென்பது நம்பக் கூடியதாக இல்லை. ஏனெனில் புகழ் என்பது ஒருவன் தன்னுடைய சக்தியோடு மற்றவர்களுடைய சக்தியையும் ஒப்பிட்டுப் பார்ப்பதினாலேயே ஏற்படக்கூடியதாய் இருக்கிறது.

3. கடவுள் என்பவர் எல்லையற்ற சந்தோஷத்தில், தனக்குத் தானே ஒப்பிடக்கூடியவராய் இருந்தால், அவருடைய அற்ப ஜீவன்களின் வாழ்த்துகளையும், புகழ்ச்சி உரைகளையும் ஏன் அவர் விரும்பவேண்டும்?

4. பல திறமான வேலைகளைச் செய்திருந்தும் அவருக்குப் புகழ்ச்சி மாத்திரம் இல்லை. ஏனெனில், உலகிலுள்ள எல்லா மதங்களும் அவர் பெருத்த கோபக்காரர் என்று சொல்லுகின்றன. அவைகளின் (மலங்கள்) முழு நோக்கமும் பாவியான, நன்றியறிதலில்லாத சச்சரவுக்காரனான மனிதனையும், அவருடைய கோபக்காரக் கடவுளையும் சம்பந்தப்படுத்துவதாகவே இருக்கிறது.

## 50. மனிதனுக்காக கடவுள் இல்லை; கடவுளுக்காக மனிதனும் இல்லை.

---

கடவுள் எல்லையற்றவர் என்றால், அவர் மனிதனுக்காக இல்லை. மனிதன் எறும்புகளுக்காகவா படைக்கப்பட்டிருக்கிறான்? அதுபோலவே தான் கடவுளும். ஒரு தோட்டத்திலிருக்கும் எறும்புகள் அந்தத் தோட்டக்காரனைப் பற்றியும், அவனுடைய எண்ணங்கள், ஆசைகள் முதலியவைகளைப் பற்றியுமா நினைத்துக்கொண்டிருக்கின்றன. இல்லவே இல்லை வர்சேல்ஸ் நகரத்திலுள்ள பெரிய நந்தவனத்தை அவ்வூர் அரசன் தங்களுடைய வசதியை உத்தேசித்தே உண்டாக்கியிருக்கிறான் என்று அந்த நந்தவனத்திலுள்ள எறும்புகள் நினைத்துக் கொள்வதாயிருந்தால், அவைகளினுடைய அறிவைப் பற்றி நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? ஆனால் மதங்கள் சொல்லுகிறபடி பார்த்தால் மிக அற்ப ஜந்துவுக்கும், மனிதனுக்கும் எத்தகைய சம்பந்தமிருக்கிறதோ அதை விட மிகக் குறைவான சம்பந்தமே மனிதனுக்கும், கடவுளுக்கும் இருக்கமுடியும். ஆகையினால் மதக் கொள்கைகளின்படி

பார்த்தாலுங்கூட, கடவுளைப்பற்றியே மதங்கள் கூறுகிற வரையிலும் மதங்கள் என்பவைகள் எல்லாம் ஆபாசங்களும், பொய்களும், முரண்களும் கலந்த ஒரு பெருங் களஞ்சியம் என்றே சொல்லவேண்டும்.

## 51. மனிதனைச் சந்தோஷப் படுத்துவது தான் கடவுளின் நோக்கமா ?

)o(

கடவுள் உலகத்தைப் படைத்ததின் முழு நோக்கமும் மனிதனைச் சந்தோஷப்படுத்துவதற்காகவே என்று சொல்லப்படுகிறது. ஆனால் மனிதனுக்காகவே உண்டாக்கப்பட்டும், சர்வ வல்லமையுள்ள கடவுளால் அரசு செலுத்தப்பட்டும் வரும் இவ்வுலகத்தில், உண்மையாகவே மனிதன் நிரம்ப சந்தோஷமாகவே இருக்கிறனா? அவன் அனுபவிக்கும் சுகங்களெல்லாம் அழியாமலிருக்கின்றனவா? மனிதனுடைய சந்தோஷங்களில் துன்பங்களும் கலந்து இருக்கின்றனவே? தங்களுக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்திபடைகின்றவர்கள் நூற்றுக்கு எத்தனை பேர் இருப்பார்கள்? மனித சமூகமானது தேக சம்பந்தமான கெடுதிகளுக்குத் தானே சதா ஆளாய்க்கொண்டே இருக்கிறது. கடவுளினுடைய தொழிலிலேயே முதல்தரமான வேலைப்பாடு என்று சொல்லப்படும் இந்த மனித இயந்திரமானது எத்தனை ஆயிர விதங்களில் கெட்டுப்போகக் கூடியதாய் இருக்கிறது? மிகவும் சிக்கலான ஒரு இயந்திரம் அந்த இயந்திரமும் எந்த நிமிஷத்திலும் சீக்கிரம் கெட்டுப்போகக் கூடியதாகவும், அதுவும் கொஞ்ச நாளில் அழிந்து போகக்கூடியதாகவும், இம்மாதிரி எல்

லாம் இருக்கின்ற ஒரு இயந்திரத்தைச் செய்த ஒரு இயந்திர வேலைக்காரனின் மூளையை நாம் சிறப்பித்துக் கூற முடியுமா?

## 52. கடவுள் என்ற வார்த்தைக்கு அர்த்தமேஇல்லை.

கடவுள் நம்முடைய தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்து, நமக்குச் சந்தோஷத்தையும், கொடுத்து, நம்மை ரக்ஷிக்கிறபடியால் அவரை ரக்ஷகன் என்று அழைக்கிறோம். ஆனால் உண்மை என்னவென்றால், நம்மைச் சுற்றி நன்கு பார்ப்போமானால், நமக்காக கடவுள் ஒன்று கூட அளிக்கவில்லை என்பதை உணரலாம். ரக்ஷகராகிய கடவுள் இவ்வுலகிலுள்ள பெருவாரியான மக்களை உதாசினப்படுத்தியே இருக்கிறார். ஏதோ ரொம்பச் சிறு தொகையினரான மக்கள் சந்தோஷமாக இருப்பதுபோல் தோன்றினாலும் எவ்வளவு கோடானு கோடி மக்கள் துன்பத்திலும் கொடுமையிலும் சிக்குண்டு கதறுகிறார்கள்! ஏதோ சில கொடியவர்கள் சுகம் அனுபவிப்பதற்காக எவ்வளவு தேசங்கள் பட்டினியாலும் வறுமையினாலும், வாடும்படி நேரிடுகின்றன. ஆனால் நமது தத்துவ ஞானிகளோ கடவுளின் பரோபகாரத்தைப் பற்றி சாங்கோபாங்கமாக வாய் கிழியக் கத்துவதில் குறையவில்லை. 'கடவுள் எதிர்பாராத விபத்துக்களை உண்டாக்குவதிலிருந்தே மனிதனுடைய எண்ணங்கள் நிறைவேறுமலிருப்பதற்காக கடவுள் விளையாடுகிறார் என்பது தெரியவில்லையா'? என்று கேட்கிறார்கள். 'மனிதர்களை அவர்கள் வழிகளிலிருந்தும் திருப்பி அவர்களு

டைய முயற்சிகளைக் கண்டு கடவுள் பரிகசித்து அவர்கள் முயற்சிகளைத் தோல்வியடையும்படி செய்வதிலிருந்தே அவரை எல்லோரும் நம்பவேண்டும் என்பது விளங்கவில்லையா’? என்று இம்மேதாவிகள் கேட்கிறார்கள். ஆனால் நான் கேட்பது என்னவென்றால், நம்மைப் பரிகசித்து நம்முடைய துன்பத்தில் சந்தோஷப்படும் குரோத குண முடைய ஒரு கடவுளிடத்தில் நாம் எப்படி நம்பிக்கை வைக்கமுடியும் என்பதேயாகும். ஒரு மறைவான அறிவை அதனுடைய நடவடிக்கைகளே எனக்கு விளங்காமலிருக்கும்பொழுது—எப்படி நான் புகழமுடியும்? அதனுடைய பலன்களைக் கொண்டு நிர்ணயிக்கவேண்டும் என்று நீங்கள் சொல்வீர்கள். ஆம் பலன்களைக் கொண்டு தான் நிர்ணயிக்கிறேன். ஆனால் அந்தப்பலன்கள் சில சமயம் எனக்கு நன்மையாகவும், சில சமயம் தீமையாகவும் ஏற்படுகிறதே என்பது தான் எனது கேள்வி.

‘இல்லை, இல்லை கடவுளை அவ்வாறு நிர்ணயிக்கக் கூடாது. ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் கஷ்டத்தைவிட அதிகமான சுகமே அனுபவிக்கிறான். ஆதலால் அதைக் கொண்டே கடவுளிருப்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்’ என்பீர்கள். சரி அப்படியே வைத்துக் கொள்வோம். இந்தக் கடவுள் நமக்கு 100 நன்மைகளைக் கொடுத்திருப்பதாகவும், அதில் 10 மாத்திரம் தீமைகள் என்றும் வைத்துக்கொள்வோம். அப்படியானால் கடவுளுக்கு இருக்கும் ஒவ்வொரு 100 நல்ல குணங்களுக்கும் 10-ல் ஒரு பங்கு குரோத புத்தியும் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டாமா? இதை ஒத்துக் கொண்டால் கடவுள் பரிபூரணமானவர் என்று சொல்லப் படுவதற்கு முரணாக ஏற்படவில்லையா?

எல்லாப் புத்தகங்களும் கடவுளைப் பற்றியும், அவருடைய ரக்ஷிக்கும் குணத்தைப் பற்றியும் பிரமாதமாகப் புகழ்கின்றன. அவைகள் சொல்வதைப் பார்த்தால், மனிதன் இவ்வுலகில் சந்தோஷமாக வாழவேண்டுமானுல், கொஞ்சங்கூட சிரமப்பட வேண்டியதில்லை போல் தோன்றுகிறது. ஆனுல் அதற்கு விரோதமாக மனிதன் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்யாமல் ஒரு நாள் கூட வசிக்கமுடியவில்லை என்பதைக் காண்கிறோம். மனிதன் தன்னுடைய வாழ்க்கையை நடத்தும் பொருட்டு கொஞ்சமும் ஓய்வின்றி ஓடியும் ஆடியும் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபடவேண்டி இருக்கிறதென்பதை என் கண்முன் பார்க்கிறேன். இந்த மாதிரி இரண்டாவது காரணங்களில்லாமல் முழுமுதற் காரணத்தால் மாத்திரம் (கடவுள்) மனிதன் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லை என்பதையும் பார்க்கிறேன். இப் பூகோளத்தில் சகல பாகங்களையும் நான் பரிசீலனை செய்யும்போது நாகரீகம் அடைந்தவனுயிருந்தாலும் சரி, நாகரீகமே தெரியாதவனுயிருந்தாலும் சரி, இருவரும் கடவுளோடு சதா போராடிக் கொண்டிருப்பதையே காண்கிறேன். ரக்ஷகராகிய கடவுளால் அனுப்பப்படும் புயல் காற்றுகள், பனிக்கட்டி, வெள்ளம், பஞ்சம், நோய் முதலியவைகளால் தன்னுடைய வேலைகள் பாழாய்ப் போகாதபடி காத்துக்கொள்வதில் மனிதன் சதா கஷ்டப்பட்டுக் கசிந்து கொண்டிருப்பதையும் என் கண்முன் காண்கிறேன். சுருக்கமாகக் கூறவேண்டுமானுல் மனிதர்களுடைய சந்தோஷத்திலேயே சதா கண்ணுங் கருத்துமாக இருந்து வேலை செய்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் கடவுளால் செய்யப்படும் மிகக்

கொடுமையான, வேடிக்கைகளினின்றும் மனித சமூக மானது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சதா பிரயத்தனப் பட்டுக்கொண்டிருப்பதைக் காண்கிறேன். அறிவு சொரூபியான கடவுளானவர் மக்கள் உண்டாக்கி இருக்கும் பெரிய நகரங்களிலெல்லாம் ஆறுகள் ஓடும்படி அதி புத்திசாலித் தனமாக ஏற்படுத்தியிருப்பதைப் பற்றி கடவுளை ஒரு பக்தன் மெச்சிக்கொண்டானும். ஆறுகள் இருக்கும் இடத்தில் மனிதன் பட்டணங்களை உண்டாக்கிக் கொண்டானு? அல்லது பட்டணங்கள் இருந்த இடத்தில் கடவுள் ஆறுகளை உண்டாக்கினரா, இதில் எது முதற் காரணம் என்பதை அறியாத பக்தன் போலவேதான் எல்லா மதக்காரர்களும், தர்க்கம் செய் கிறார்கள்.

## 53: கடவுள் மனிதனுடைய நண்பன் அல்ல; கொடுமையான விரோதி.

———)o(———

அதெல்லாம் போகட்டும் கடவுளானவர் தன்னால் படைக்கப்பட்ட அபூர்வமான வேலைகளை அப்படியே பத் திரமாக வைத்துக் காப்பாற்றுவதற்காக, அவருடைய சமர்த்தை நாம் மெச்சிக்கொள்ளலாமா என்பதையா வது சற்று கவனிப்போம். ரக்ஷகரான கடவுள் தான் இவ்வுலகத்தை ஆளுகிறார் என்றால், அவர் உண்டாக்கு வதில் எவ்வளவு சுறு சுறுப்போடு இருக்கிறாரோ, அவ் வளவு சுறு சுறுப்பாகவே அவைகளை அழிப்பதிலும் இருக்கிறாரே! மனிதர்களைப் படைப்பதற்கும், அவர் களைக் காப்பாற்றுவதற்கும் எவ்வளவு அக்கரையும் சிரம

மும் எடுத்துக்கொள்ளுகிறரோ அதைவிட வெகு லெகு வாக நினைத்த க்ஷணத்தில் அவர்களை ஆயிரக் கணக் காய் ஒரே மூச்சில் அழித்து விடுகிறரே! ஒவ்வொரு நிமிஷமும் தான் படைத்த அருமை ஜீவன்களைப் புறக் கணித்தபடி தானே இருக்கிறர் அவர்களினுடைய வாசஸ்தலங்களைத் திடீரென்று அழித்து விடுகிறர்; அவர் களுடைய பயிர் பச்சைகளை அடியோடு அழித்து விடு கிறர்; வயல்களை வெள்ளங் கொண்டுபோகும்படி செய்கி றர்; மழையில்லாமல் பயிர்களை வாடும்படி செய்கிறர்; இயற்கை முழுவதையும் மனிதனுக்கு விரோதமாக ஏற் படுத்துகிறர்; மனிதனையே மற்றொரு மனிதனுக்கு விரோதமாக ஆக்குகிறர்; கடைசியாக மனிதன் துன்பத் திலேயே அழிந்துபோகும்படி செய்து முடித்து விடு கிறர். இதுதானு உலகத்தைப் பாதுகாப்பது என்பது! பேஷ்! கடவுள் மக்களிடத்தும், பிற ஜீவன்களிடத்தும் நடந்து கொள்ளும் தோரணையைப் பாரபக்ஷமின்றி ஆராய்ந்து பார்ப்போமேயானல் அவர் ஒரு அன்பான தாயைப் போலவே இல்லை என்பது விளங்கும். அதற்கு மாருக தான் ஒரு கள்ள புருஷனிடத்தில் அனுபவித்த சுகத்தின் பயனுப் ஏற்பட்ட பச்சிளங் குழந்தையைத் தூக்கி எறிந்துவிட்டோ, அல்லது கொன்றுவிட்டோ போகும் ஒரு கருணையற்ற, இரக்கமற்ற, கன்னெஞ்சு டைய, கொடூரமான, பாதகியான ஒரு தாயாரைப்போல அல்லவா உங்கள் கடவுள் இருக்கிறர்.

ஹொடென்டாட்ஸ் (Hottentots) என்ற மனிதர்கள் ஆப்பிரிக்காவில் வசிக்கிற ஒரு அநாகரீக ஜாதியார்கள். இவர்கள் கடவுளை வணங்க மறுக்கிறர்களாம்; ஏனென்

ருல் அவரால் இன்பத்தைவிட துன்பமே அதிகமாயிருக்கிறதென்று நம்புகிருர்களாம். இந்த விஷயத்தில் நாகரீகமுடைய மக்களைவிட அவர்கள் எவ்வளவோ புத்திசாலிகள்தான். கடவுளானவர் அன்பு, அறிவு, முன் யோசனை முதலியவைகளே சொரூபமாக இருப்பவர் என்று விடாப் பிடியாய்ச் சொல்பவர்களை விட இவர்கள் சொல்வது எவ்வளவோ அறிவுக்கும், அனுபவத்திற்கும் ஒத்ததாயிருக்கிறது என்பதில் ஏதேனும் சந்தேகம் உண்டா? எண்ணிக்கையற்ற இன்னல்களை இவ்வுலகில் உண்டாக்கிய ஒன்றினுடைய கைகளை சந்தோஷத்தினுல் முத்தங் கொடுக்கும் சோணகிரிகளை விட, மேற்சொன்னவர்கள் எவ்வளவோ அறிவாளிகள் என்பதில் என்ன சந்தேகம்?

## 54 இல்லை; ஒரு அறிவுள்ள ஜீவனுல் உலகம் ஆளப்படவே இல்லை.

---

ஒரு காரணத்தை அதன் பலன்களால்தான் நிர்ணயிக்கவேண்டுமென்று பகுத்தறிவின் தர்க்க ஞாயம் கூறும். ஒரு விஷயமானது நன்மையும், உபயோகமுள்ளதும், சௌக்கியமானதுமான பலன்களை எப்போதும் செய்து கொண்டிருந்தாலொழிய அதை நன்மையின் சொரூபமென்று புகழ முடியாது. சில சமயங்களில் நன்மையையும், சில சமயங்களில் தீமையையும் செய்துகொண்டிருக்கும் ஒரு காரணத்தை நன்மையும், தீமையும் கலந்தது என்று தான் சொல்லவேண்டும். ஆனுல் மதங்களின் தர்க்கமானது இதை ஒத்துக் கொள்வதில்லை. அவைகள் சொல்வதென்னவென்ருல், இயற்கைத் தோற்

றங்களையும், அவைகளின் பலாபலன்களையும் பார்த்தால் இவைகளுக்கெல்லாம் காரணமாய் நன்மையே சொரூபமான ஒரு காரணம் இருக்கவேண்டுமென்றும், அக்காரணம் தான் கடவுள் என்று ருசுவாகிறதென்றும் சொல்லுகின்றன. இந்த உலகமானது கெடுதிகளே நிறைந்ததாய் இருந்தும், அடிக்கடி குழப்பங்களுமே நிகழ்ந்து கொண்டிருந்தும், மக்கள் ஒவ்வொரு நிமிஷமும் அழுக்தப்பட்டு, நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுதுங்கூட, இவைகளுக்கெல்லாம் காரணமாயிருப்பது, அழிக்கமுடியாத தயாபரமான ஒரு காரணம் என்பதை நம்பவேண்டுமாம்! இதையும் அநேக மக்கள் நம்புகிறார்கள்!—இல்லை!—நம்புவதாகப் பாசாங்கு செய்கிறார்கள்!!

இவ்வுலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு விஷயமும், இவ்வுலகமானது ஒரு அறிவுள்ள ஜீவனால் ஆளப்படவில்லை என்பதை வெகு தெளிவாய்க் காட்டும். ஒரு ஜீவன் அறிவுள்ளதா? இல்லையா என்பது, அந்த ஜீவன் தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு உபயோகிக்கும் சாதனங்களால் தான் நிர்ணயிக்க வேண்டும். மனித சமூகத்தை சந்தோஷப்படுத்துவதே கடவுளின் லட்சியம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் நடைமுறையிலோ உணர்ச்சியுள்ள சகல ஜீவன்களும் அதிகமாய்க் கஷ்டப்பட்டும், சிறிது சுகத்தை மாத்திரம் அனுபவித்தும் கடைசியாய் மடிந்து போவதையுமே காண்கிறோம். மனித வாழ்க்கை இன்பமும் துன்பமும், கலந்ததாகவே இருக்கிறது. எங்கு பார்த்தாலும் நன்மையும், தீமையும் கலந்தே இருக்கிறது. ஒழுங்கு இருக்கும் இடத்தில் குழப்பம் வந்துவிடுகிறது. பிறப்பு வந்த

தும் அழிவும் அத்துடன் கூடவே வந்துவிடுகிறது. கடவுளுடைய செயல்களெல்லாம் அற்புதங்கள்; அவைகளை எல்லாம் என்னால் அறியமுடியாது என்று சொல்வீர்களானால், நான் சொல்லும் பதில்—ஆமாம்; கடவுள் அறிவுள்ளவர் என்பதை என்னால் சொல்லமுடியாது என்பதே.

## 55. கடவுள் மாற்ற முடியாதவரா?

கடவுள் மாற்ற முடியாதவரென்று சொல்லுகிறீர்கள்! ஆனால் அவருடைய ராஜ்யமாகிய இவ்வுலகில் சகல வஸ்துக்களும் சதா மாறிக்கொண்டே இருப்பதற்குக் காரணம் என்னவென்று உங்களைக் கேட்கிறேன். கண்ணுக்குத் தெரியாத இந்த அரசனுடைய (கடவுள்) ராஜ்யம் தவிர வேறு எந்தத்தேசமாவது அடிக்கடி இவ்வளவு குரூரமான புரட்சிகளுக்கு ஆளாகிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? இவ்விதம் ஒவ்வொரு அணுவும் சதா மாறிக்கொண்டிருந்தும் இவ்வுலகத்தை ஆள்பவன் மாற்ற முடியாதவனென்றும், அழியாதவனென்றும் நாம் எப்படிச் சொல்லமுடியும்? என்னுடைய இனமாகிய மனித சமூகத்திற்கு மோக்ஷமாய் இருக்கும் விஷயங்களையெல்லாம் அப்படியே மாற்றாமல் நிலைத்திருக்கும்படி செய்யக்கூடிய கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதைப் பற்றி நான் நினைக்கவேண்டுமானால், என்னுடைய இனத்தைச் சதா கஷ்டங்களிலேயே அழுத்திக்கொண்டிருப்பதற்குக் காரணஸ்தனான ஒரு கடவுளைப்பற்றி நான் என்ன நினைக்கவேண்டும்? ஆனால் நீங்கள் சொல்வீர்கள்,—நாம் செய்யும் பாவங்களெல்லாம் அவர் நம்மைத் தண்டிக்கும்

படி செய்கின்றன—என்பீர்கள். அப்படியானல் நான் சொல்வேன்,—கடவுள் மாறுபவரல்ல; ஏனெனில் மனிதனுடைய பாவங்களெல்லாம் அவருடைய குணத்தை (தயாபரன்) மாற்றும்படி செய்து விடுகின்றனவல்லவா? சில சமயங்களில் கோபமடைவதும், சில சமயங்களில் சாந்தமடைவதுமான ஒரு ஜீவனை மாருதது என்று எப்படிச் சொல்லமுடியும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

## 56. ஒன்றையும் மாற்றமுடியாத கடவுள் ஒன்று உண்டா?

---

உலகம் எப்படி இருக்கமுடியுமோ அப்படித்தானிருக்கிறது. உணர்ச்சியுள்ள ஜீவன்கள் அத்தனையும் உலகில் சுகதுக்கங்களை அனுபவித்துக் கொண்டுதானிருக்கின்றன. அதாவது, சில சமயங்களில் திருப்திகரமாகவும், சில சமயங்களில் அதிருப்திகரமாகவும் அவைகள் இயங்கிக்கொண்டுதானிருக்கின்றன. இந்தக் காரியங்கள் அவசியமாய் நடந்துதான் ஆகவேண்டும். அவைகள் இயங்குவதற்குக் காரணம், அவைகளுக்குள்ள இயற்கையான குணங்களேயாகும். இந்தக் காரியங்கள் என்னுடைய இயற்கைக்குத் தக்கமாதிரி என்னைத் திருப்திப்படுத்தவேண்டும், அல்லது அதிருப்திப் படுத்தவேண்டும். இதே இயற்கைதான் சில விஷயங்களை சண்டையிட்டுத் தடுத்து ஒதுக்கும்படியான எண்ணத்தையும், எனக்குள் உண்டாகும்படி செய்கிறது. அவசியம் காரணமாக ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடக்கக் கூடிய

ஒரு உலகத்தில், ஒன்றையும் திருத்தி அமைக்க முடியாத ஒரு கடவுள்,—எல்லாம் சுயேச்சையாகவே நடந்து கொண்டிருக்கும்படி விட்டுக்கொண்டிருக்கும் கடவுள்—அவசியமா என்பதை வாசகர்களே சொல்லட்டும். இயற்கைக்குள்ளே தானும் கட்டுப்பட்டு, அதன் சட்டங்களைச் சிறிதுகூட மாற்றுவதற்கு வல்லமை இல்லாத ஒரு கடவுளை செவிட்டுக்கடவுளென்றுதான் சொல்லவேண்டும். எனக்குத் திருப்தியளிக்ககூடியதாயும், எனக்குச் சந்தோஷத்தைத்தரக்கூடியதாயும் உள்ள விஷயங்களை ஆயிரத்துக்கு ஒன்று கூட செய்ய இஷ்டமில்லாத, செய்யமுடியாத ஒரு கடவுள்,—தயாபரராயிருந்தாலென்ன? அளவிட முடியாதவராயிருந்தாலென்ன? அவரைப் பற்றி நான் ஏன் கவலையெடுத்துக் கொளளவேண்டும்? என்னுடைய சந்தோஷத்தைப் பற்றியும் சிறிதுகூடக் கவலை கொள்ளாத கடவுள், அன்பே சொரூபமென்றால் அதை நான் எப்படி நம்பமுடியும்? எனக்கு அளவு கடந்த நன்மையைச் செய்ய வல்லமையுள்ளதாகச் சொல்லப்படும் ஒரு கடவுள் எனக்கு அவைகளில் ஒரு சிறு பாகத்தைக்கூடச் செய்ய இஷ்டமில்லை என்றால்,—அந்தக் கடவுளால், எனக்கு யாது பிரயோஜனம் ஏற்படக்கூடும்?

## 57. சுவர்க்கமும், மறு ஜென்மமும் கற்பனைகளே.

நல்ல ஒரு கடவுளின் ஆட்சியின் கீழுள்ள மக்களில் பெரும்பாலோர் ஏன் துன்பத்திலேயே கிடந்து போகங்குகிறார்கள் என்று நாம் கேட்போமானால், இந்த உலக வாழ்க்கையானது மிகவும் அநித்தியமானது என்றும், இதைவிட சந்தோஷமான ஓரிடத்திற்குப் போவதற்காக

நம்மைப்பக்குவப் படுத்துவதற்காகவே இவ்வுலகம் இருக்கிறதென்றும் மதக்காரர்கள் கூறுகிறார்கள். நம்முடைய இவ்வுலக வாழ்க்கையானது ஒரு சோதனையைப் போன்றது என்றும் கூறுகிறார்கள். பிறருடைய கஷ்டங்களுக்காக கடவுள் கவலைப்படுவதில்லை என்றும், அளவற்ற சந்தோஷ நிலை என்பதை தனக்கு மாத்திரமே அவர் ஒதுக்கி வைத்திருக்கிறாரென்றும் நம்மிடம் கூறி நம் வாயை அடக்கப் பார்க்கிறார்கள். இந்த மாதிரியான பதில்களால் நாம் எப்படி திருப்தியடைய முடியும்?

1. மறு ஜென்மம் இருக்கிறது என்பதற்கு மனிதனுடைய கற்பனையைத் தவிர வேறு அத்தாட்சி எதுவும் கிடையாது. மனிதனுக்கு இவ்வுலகில் கிடைக்கும் சந்தோஷத்தை விட இன்னும் மேலானதும் அதிகம் நீடிக்கக்கூடியதுமான சந்தோஷம் கிடைக்கவேண்டுமென்ற பேராசையினால் தான் இந்தக் கற்பனையை உண்டாக்கிக் கொள்ளுகிறான்.

2. கடவுள் சகலமும் தெரிந்தவரானதால், அவருடைய ஜீவன்களுடைய இயற்கைக் குணத்தை வெகு நன்றாய் அறிந்திருக்கவேண்டும். அப்படியிருக்க, அந்த ஜீவன்களுடைய நடைமுறைகளைப் பற்றி தனக்கு ருஜுக்கள் வேண்டுமென்று நினைக்கிற அப்பேர்பட்ட ஒரு கடவுள் உண்டென்று நாம் எப்படி நம்பமுடியும்?

3. ஆராய்ச்சிக்காரர்களுடைய கணக்குப்படி நாம் வசிக்கும் இந்தப் பூமியானது சுமார் ஆறாயிரம் அல்லது ஏழாயிரம் வருஷங்களுக்கு முன்பிருந்தே ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. இத்தனை வருஷங்களாக

மனித சமுதாயமானது பல வேறு வழிகளில் பல கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறது. மனித சமூகமானது கொடியவர்களாலும், வீரர்களாலும், சண்டையில் வெற்றியடைந்தவர்களாலும் இடைவிடாமல் நசுக்கப்பட்டும் கொடுமைப்படுத்தப்பட்டும் வந்தது என்பதை சரித்திரம் படித்தவர்கள் நன்கறிவார்கள். சண்டைகளிலும் வெள்ளப் பெருக்கினுலும், கொடும் பஞ்சங்களினுலும், தீரா நோய்களினுலும் மனித சமூகம் கும்பல் கும்பலாய் அழிக்கப்பட்டதையும் சரித்திரம் படித்தவர்கள் மறுக்க முடியாது. இவைகள்தானு ஈசுவரனுடைய தயாள குணத்தில் நமக்கு நம்பிக்கையுண்டாகும்படி செய்யப் போகின்றன? சர்வேசுவரன் நமக்காக ஒரு நல்ல இடம் வைத்திருக்கிருர் என்பதை மேற்கண்டவைகளைக் கொண்டா நம்புவது?

4. கடவுள் தன்னுடைய ஜீவன்களிடத்தில் அன்பாயிருக்கிருர் என்று சொல்லப்படுவது உண்மையானுல் அளவற்ற ஆழ்ந்த நிலைமையை அந்த ஜீவன்களுக்கு அளிக்காமல் போனுலும், ஏதோ, அவைகளுக்கு வேண்டிய அளவு சாதாரண சந்தோஷத்தையாவது அளிக்ககூடாதா? நாம் சந்தோஷமாக இருக்க வேண்டுமானுல், அதற்காக எல்லையற்ற சந்தோஷ நிலை, ஈஸ்வரனுடைய சந்தோஷ நிலை என்ற ஒன்று இருக்கவேண்டியது அவசியந்தானு?

5. மனிதன் இவ்வுலகில் அனுபவிக்கும் சந்தோஷத்தைவிட அதிகமான சந்தோஷத்தைக் கடவுளால் அளிக்கமுடியாதென்ருல், குறிப்பிட்ட சிலர் மாத்திரம் நிரந்தரமான சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்கலாம்

என்று சொல்லப்படுகின்ற சுவர்க்கம் என்ற ஒன்று இருப்பதாக எவ்வாறு நம்பமுடியும்? நம்பித் தெரிந்த வாசஸ்தலமாகிய இப்பூமியிலுள்ள துன்பங்களைக் கடவுள் நீக்கமுடியாது, நீக்கவும் மாட்டார் என்றால், நமக்குத் தெரியாத மற்றொரு உலகத்திலுள்ள கெடுதிகளை நீக்கி விடுவார், நீக்கிவிட முடியும் என்பதை எந்தக் காரணத்தைக்கொண்டு யூகித்துக்கொள்வது என்பதைத் தயவு செய்து சொல்லுங்கள். சுமார் 2000 வருஷங்களுக்கு முந்தி லாக்டன்ஸ் என்ற ஒரு அறிவாளி கீழ்வருமாறு கூறியிருக்கிறார் "ஒன்று துன்பங்களைத் தடுக்கக் கடவுள் விரும்புகிறார்; ஆனால் அவரால் முடியவில்லை அல்லது அவரால் முடியும்; ஆனால் அவர் செய்யமாட்டார். அல்லது அவரால் செய்யமுடியாது; செய்யவும் மாட்டார். அல்லது அவரால் செய்யவும் முடியும்; செய்வார். அவருக்குச் செய்ய விருப்பமிருக்கிறது; ஆனால் செய்வதற்குச் சக்தியில்லை என்றால், அவர் சக்தியற்றவர் என்று ஏற்படுகிறது. அவருக்குச் செய்ய சக்தி இருக்கிறது; ஆனால் செய்யமாட்டார் என்று சொன்னால் அவர் குரோத புத்தியுடையவர் என்று ஏற்படுகிறது. கடவுளைக் குரோத புத்தியுடையவர் என்று சொல்வது தகுதியல்ல. அல்லது ஒருக்கால் துன்பங்களைத் தடுப்பதற்கு அவருக்கு சக்தியும் இல்லை, இஷ்டமும் இல்லையென்றால், அவர் சக்தியற்றவர், குரோத புத்தியுடையவர் என்று ஏற்படுகிறது. அப்படியானால் அவரைக் கடவுள் என்று கூறக்கூடாது. துன்பங்களைத் தடுப்பதற்கு அவருக்கு இஷ்டமும் உண்டு, சக்தியும் உண்டு என்றால், பின்னை ஏன் அவைகள் இருக்கவேண்டும்? அவைகளைத் தடுக்காமல் ஏன் இருக்கிறார்"?

மேற்கண்ட சந்தேகங்களை விளக்கக்கூடிய பதில் சொல்வதற்கு சுமார் 2000 வருஷங்களாக எவருமே முன் வந்ததாகக் காணோம். ஆனால் நமது மதக்காரர்களைக் கேட்டால், இந்த இரகசியங்களெல்லாம் நமது இவ்வுலக வாழ்க்கைக்குப் பிறகுதான் தெரியும் என்று சொல்லிக் கொடுக்கிறார்கள்.

## 58. மற்றொரு சோம்பேறிக்கற்பனை.

———)o(———

மனித சமூகமானது அநேக பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். அதாவது, கடவுளான வர் தன்னுடைய சிருஷ்டிகளை பலபிரிவுகளாகப் பிரித் திருப்பதாகவும், ஒவ்வொரு பிரிவும் அது அதற்கு உரிய அளவு சந்தோஷத்தை அநுபவித்துக்கொண்டு தானிருக் கிறது என்றும் சொல்லுகிறார்கள். வேடிக்கையான இந்த ஏற்பாட்டின்படி ஒருகிளிஞ்சல் முதல் தேவதூதன் வரையிலுள்ள சகல ஜீவன்களும் அவை அவைகளுக்குரிய சந்தோஷத்தை அநுபவித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அநுபவத்தில் பார்த்தால் இந்த உன்னதமான மனோராஜ்யம் எவ்வளவு முரண்பட் டது என்பது விளங்கும். நாம் வசிக்கும் இவ்வுலகி லுள்ள உணர்ச்சியுள்ள ஜீவன்கள் அவ்வளவும் ஆபத் துக்களின் மத்தியிலேயே கிடந்து உழல்வதைப்பார்க் கிறோம். மனிதன் ஒரு அடியை எடுத்துவைக்க வேண்டு மானாலும், உணர்ச்சியுள்ள பலகோடி ஜீவன்களை காயப் படுத்தாமலோ, தொல்லைப்படுத்தாமலோ, நசுக்கிக்கொள் ளாமலோ இருக்கவேமுடியாது. ஆனால் அவன் நிலை

யோ? அவனுடைய உயிருக்கே உலை வைக்கக்கூடிய நூற்றுக்கணக்கான ஆபத்துக்களுக்கு,—அவனுக்குத் தெரிபவைகளும் உண்டு, தெரியாதவைகளும் உண்டு— அவன் ஒவ்வொரு க்ஷணமும் ஆளாக வேண்டியவனுக வேயிருக்கிறுன். அவ்வளவு தூரம் போவானேன்? என்றைக்காவது ஒருநாளைக்கு நாம் சாகப்போகிறோம் என்றஒரு நினைப்பே அவனுடைய சந்தோஷத்தைக் குலைப்பதற்குப் போதாதா? மனிதனுடைய ஆயுள் முழு தும் சதா துன்பமயமாகவே இருக்கிறது. கடவுளால் அளிக்கப்பட்ட பெரிய வரப்பிரசாதம் என்று எதை நினைத்திருக்கிறுனே, எதில் அவனுக்கு அதிகமான பற் றிருக்கிறதோ, அதுவாகிய தன்னுடைய உயிரையே பத் திரமாய் வைத்திருக்கலாமென்ற நம்பிக்கை அவனுக்கு ஒரு விநாடிகூட இருக்க முடியவில்லையே!

## 59. மனிதனுடைய துன்பங்களுக்குக் கடவுளே பொறுப்பாளி.

இந்த உலகம் லாயக்கான அளவுக்கு எல்லாம் சரி யாகவே அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வார்கள். இந்த உலகமே அதைப் படைத்த கடவுள் அல்லவென்ற ஒரு காரணத்தைக் கொண்டே, இந்த உலகில் உன்னத மான குணங்களும் பெரிய குற்றங்களும் இருக்கவேண் டும் என்பது புலப்படவில்லையா என்றும் கேட்கிறுர்கள். இதற்கு நம்முடைய பதில் என்ன தெரியுமா? இந்த உல கில் பெரிய குற்றங்கள் மலிந்து கிடக்கின்றன என்பதிலி ருந்தே, முற்றிலும் சந்தோஷமான ஒரு உலத்தை சிருஷ்டி செய்யமுடியாதது கடவுளினுடைய பரோபகார சிந்

தக்கு ஏற்றதல்ல என்பதே நமது பதிலாகும். ஆனால், இவ்வுலகத்தை சிருஷ்டி செய்வதற்கு முந்தியும் சிருஷ்டி செய்த பிறகும் கூட கடவுளானவர் அளவு கடந்த சந்தோஷத்திலேயே இருக்கிறார் என்று நீங்கள் சொல்லலாம். அப்படியானால் அவர் ஏன் சமாதானம் என்பதே இல்லாமல்இருக்கிறார்? மனிதன் ஏன் கஷ்டப்படவேண்டும்? மனித ஜீவன்தான் ஏன் இருக்க வேண்டும்? அவனுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தம் என்ன? ஒரு சம்பந்தமுமே இல்லையா? அல்லது ஏதாவது கொஞ்சம் சம்பந்தமாவது இருக்கிறதா? மனிதன் இருக்கவேண்டியது கடவுளுக்கு பிரயோஜனமோ அல்லது அவசியமோ இல்லையானால் கடவுள் அவனை ஏன் சூன்யத்திலேயே விடவில்லை? அல்லது ஒரு வேளை கடவுளின் பிரதாபத்திற்காக மனிதன் இருக்கவேண்டியது அவசியம் என்றால், அப்போது கடவுளுக்கு மனிதன் தேவையாயிருந்தது என்று ஏற்படுகிறது. எனவே, மனித ஜீவன் உண்டாவதற்கு முந்தி கடவுளுக்கு ஏதோ கொஞ்சம் குறை இருந்திருக்கிறது என்று ஏற்படவில்லையா?

பிழையான வேலையைச் செய்ததற்காக அறிவற்ற ஒரு தொழிலாளியை நாம் மன்னித்து விடலாம். ஏனெனில், சரியாகவோ தப்பாகவோ அவன் வேலை செய்துதான் ஆகவேண்டும் இல்லாவிடில் அவன் பட்டினி கிடந்து சாக வேண்டியிருக்கும். இந்த மாதிரியான ஒரு தொழிலாளியை நாம் மன்னித்து விடலாம் ஆனால் உங்களுடைய கடவுளை மன்னிக்க முடியாது. ஏனென்றால், நீங்கள் சொல்கிறபடி, கடவுள் பரி பூரணமானவர். அப்படியானால், மனித சமூகத்தை சிருஷ்டிசெய்ய வேண்டிய அவசியமென்ன? நீங்கள் சொல்கிறபடி, மனித சமூ

262
N35



கத்தை சந்தோஷமாக்கக் கூடியவைகள் அத்தனையு
அவரிடம் இருக்கின்றன அல்லவா? அப்படியானா
மனித சமூகத்தை சந்தோஷப் படுத்தாமல் ஏன் இருக்
கிறார்கள்? இதிலிருந்து நாம் என்ன முடிவுக்கு வரவேண்
டியிருக்கிறது? உங்களுடைய கடவுளுக்கு நல்லெண்ணத்
தை விட குரோதபுத்தியே மிகுந்திருக்கிறது என்
பதை ஒப்புக்கொள்ள வேண்டாமா? அல்லது, கடவு
ளுக்கு இதுவரையில் செய்திருப்பதை விட, வேறொன்
றும் செய்ய முடியாது என்பதையாவது ஒத்துக்கொள்ள
வேண்டும். உங்களுடைய கடவுள் சுயேச்சையானவர்
என்று சொல்லுகிறீர்கள். மாற்றக்கூடாதவர் என்றும்
சொல்லுகிறீர்கள். ஆனால், இந்த உலகிலுள்ள அநித்தி
யமான ஜீவன்களைப் போலவே அவருடைய அதிகாரத்
திற்கும் ஆரம்ப காலம் முடிவு காலம் ஆகியவைகள்
இருக்கின்றன என்பதை உணர்கிறோம். ஓ! மதக் கர்த்
தாக்களே! மனிதனுடைய கஷ்டங்களிலிருந்து உங்களு
டைய கடவுளைத் தப்புவித்து அவரை நிரபராதியாக்கு
வதற்காகத் தாங்கள் பட்ட பாடெல்லாம் வியர்த்தமாகி
விட்டதே! இந்தப் பரிபூரணமான கடவுளும் மனித
னைப் போன்ற குற்றங்களைத்தானே செய்கிறார்! அப்
போது மனிதனுக்கும், கடவுளுக்கும் என்ன தான் வித்தி
யாசம்!

———)o(———

77804

குறிப்பு:—இதன் இரண்டாம் பாகம் அச்சில் இருக்கிறது,
விரைவில் வெளி வரும். எல்லோரும் அவசியம்
படிக்கவேண்டியதாகும். எதிர் பாருங்கள்!

# பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக

# வெளியீடுகள்.

---

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பெண் ஏன் அடிமையானாள்? (ஈ. வெ. ரா.) | 0 | 5 | 0 |
| 2. | முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை | 0 | 5 | 0 |
| 3. | கடவுள். | 0 | 5 | 0 |
| 4. | மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன? | 0 | 3 | 0 |
| 5. | பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும் (இரண்டாம் பாகம் அச்சில்) | 0 | 3 | 0 |
| 6. | பிரகிருதிவாதம் (ஈ. வெ. ரா.) | 0 | 3 | 0 |
| 7. | மதமும், விஞ்ஞான சாஸ்திரமும் | 0 | 3 | 0 |
| 8. | பிரபஞ்ச உற்பத்தி | 0 | 3 | 0 |
| 9. | நான் ஏன் கிறிஸ்தவனல்ல? | 0 | 3 | 0 |
| 10. | நான் சம்சயவாதி ஆனதேன்? | 0 | 3 | 0 |
| 11. | மதம் என்றால் என்ன? | 0 | 2 | 0 |
| 12. | குடி அரசுக் கலம்பகம் (ஈ. வெ. ரா.) | 0 | 6 | |
| 13. | மெய்ஞ்ஞான முறையும், மூடநம்பிக்கையும் | 0 | 6 | |
| 14. | ,, 2-ம் பாகம் | 0 | | |
| 15. | பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம் | | | |
| 16. | மரணத்திற்குப்பின் வாழ்க்கை உண்டா | | | |
| 17. | மதப் புரட்சி | | | |
| 18. | வால்டேயரின் சரிதம் | | | |
| 19. | பகுத்தறிவு அல்லது மரண ச | | | |

கிடைக்குமிட

## … அரசு பதிப்பக வெளியீடுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| … | இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| . | லெனினும், மதமும் | 0 | 4 | 0 |
| 3. | பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 3 | 0 |
| 4. | கடவுளும், பிரபஞ்சமும் | 0 | 4 | 0 |
| 5. | கைவல்யம் அல்லது ஞானக்கியானம் | 0 | 8 | 0 |
| | (இது சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது) | | | |
| 6. | இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம் | 0 | 4 | 0 |
| 7. | ,, அயோத்தியாகாண்டம் | 0 | 8 | 0 |
| 8. | ஞானசூரியன் | 0 | 4 | 0 |
| 9. | தர்ம பரீக்ஷை அல்லது புராணஆபாசம் | 0 | 3 | 0 |
| 10. | மேயோ கூற்று மெய்யா? பொய்யா? | 0 | 3 | 0 |
| 11. | பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை | 0 | 4 | 0 |
| 12. | ஈ.வெ.ரா. சீர்திருத்தமகாநாட்டு உபன்யாசம் | 0 | 2 | 0 |
| 13. | அகத்தியர் ஆராய்ச்சி | 0 | 2 | 0 |
| 14. | இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு | 0 | 2 | 0 |
| 15. | சுயமரியாதைப்பாடல் | 0 | 2 | 0 |
| …6. | கதர் மூட நம்பிக்கை (இங்கிலீஷ்) | 0 | 2 | 0 |
| | சுயமரியாதைத் தாலாட்டு | 0 | 2 | 0 |
| | …ர்ஞர்ட்ஷா உபந்யாசம் | 0 | 1 | 0 |
| | …ஷியலிசம் | 0 | 2 | 0 |
| | …ஷ்விக் முறை | 0 | 1 | 0 |
| | … இலங்கை உபந்யாசம் | 0 | 0 | 9 |
| | … வீண் கூச்சல் | 0 | 0 | 6 |
| | …சம் | 0 | 0 | 6 |
| | … | 0 | 2 | 0 |
| | … | 0 | 2 | 0 |